
# தொண்டன்

ஆரம்பம் - 1969



யூன்-2004

12/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

யூன் - 2004

மலர்-36 இதழ்-03

ஆசிரியர்

*J.A.G. இரட்ணகுமார்*

இணை ஆசிரியர்

*மலர்வேந்தன்*

துணை ஆசிரியர்கள்

*மெற்றில்டா இராஜேந்திரம்*
*செல்லத்துரை ஜெயராஜா*
*பெஸ்லீயோ வாஸ்*

வெளியீடு

*சமூகத் தொடர்பு நிலையம்.*
*திரு/ மட். மறை மாவட்டம்*

முகவரி

*சமூகத் தொடர்பு நிலையம்*
*அ.பெ.எண் - 44*
*மட்டக்களப்பு*

SOCIAL COMMUNICATIONS
CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL: 065 - 2226486

விலை - 12/=
ஆண்டு சந்தா : 190/=
ஆறுமாதச் சந்தா : 100/=
(தபாற்செலவு உட்பட)


# உள்ளே




அன்புடன் உங்களோடு - 01
மனித வரலாற்றிலும்... - 02
நீங்கள் எந்த வகைப்... - 04
துறவற வாழ்வில் பொன்விழா...- 05
பொது அறிவு - 09
மறை அறிவை வளர்ப்போம் - 10
இலக்கிய மஞ்சரி - 11
மாணவர் பக்கம் - 12
அன்பு - 13
மனித நேயம் வேண்டும் - 14
சமாதானக் கனவு - 16
உங்கள் பக்கம் - 18
தொண்டனின் சில நிமிடங்கள் - 20
அறுபதிலும் இருபது... - 21
கல்வியின் சிறப்பு - 22
விவிலியம் கற்போம் - 23
அறிவை வளர்ப்போம் - 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடன் உங்களோடு

## வாழ்வைப் பாதுகாப்போம்

மனித வாழ்வுக்கு மிகவும் இன்றியமையாதது சுற்றுப்புறச் சூழல். ஆனால் இன்று மனிதனே சூழலுக்கு எதிரியாகிவிட்டதால் அதன் பொல்லாத விளைவுகளுக்கு முழு உலகமுமே முகம் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கியம் ஏற்பட்டுள்ளது.

நில நடுக்கம், பெருவெள்ளம், மண்சரிவு அதிகரித்த சூடு, தாங்க முடியாத குளிர், பருவகாலங்களில் மாற்றம், காற்று, நிலத்து நீர் மாசடைதல், இவைகளின் காரணமாகத் தோன்றும் புதிய புதிய நோய்கள், உணவுப்பற்றாக்குறை, வறுமை என்று சூழல் பாதிப்பின் விளைவுகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

மனிதன் சுகமாக வாழ கடவுள் படைத்தளித்த இயற்கை, அறியாமையாலும், கட்டுப்பாடற்ற நுகர்வுப்போக்காலும், அனைத்திலும் ஏக போகத்தை விரும்பும் சுயநலமிகளாலும் இன்று பெரும் அச்சுறுதலுக்குள்ளாகி இருப்பது மட்டுமல்ல, மனித வாழ்வுக்குப் பெரும் ஆபத்தாகவும் மாறி உள்ளது.

மனிதனைப் படைக்க முன் கடவுள் இயற்யைகயைப் படைத்தார். அந்த இயற்கையிலிருந்தே கடவுள் மனிதனையும் படைத்தார் என்பதை வேத நூலிலிருந்து புரிந்து கொள்ள முடிகின்றது. எனவே மனிதன் என்பவன் இயற்கையின் ஒரு பகுதி; இயற்கையை அழிப்பது மனிதன் தன்னைத்தானே அழிப்பதாகும்.

நாம் இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்பதால்தான் 'ஆண்டு நடத்துங்கள்' என்று கூறினார் ஆண்டவர். அப்படி இருக்க இயற்கையை மாண்டுபோகச் செய்வது கடவுளின் திட்டத்திற்கு விரோதமானது அல்லவா? இயற்கைச் சூழலை அழிப்பது ஓர் உயிரை அழிப்பது போன்ற கொலைச் செயல்-குற்றம்-பாவம் என்ற உணர்வு வரவேண்டும்.

அனைத்துல அளவில் சூழல் பாதுகாப்பு அமைப்புக்களும், சட்டங்களும் உண்டு. ஆண்டுக்கொரு முறை சூழல் பாதுகாப்புத் தினமும் கொண்டாடப்படுகிறது. ஆனால் நடைமுறையில் சாதாரண மக்களிடம் மட்டுமல்ல பொறுப்புள்ளவர்களிடமும் கூட இது பற்றிய விழிப்புணர்வு இல்லை.

இயற்கை என்பது இறைவன் படைத்த இன்பச் சுரங்கம். நீரும் நிலமும், கடலும் வானும், மலையும் மரங்களும், மலர்களும், சாலைகளும், கூவும் குயிலும் இலவசமாய்க் கிடைத்த இனிய காட்சிகள். 'எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா!' எனப்பாடுவார் பாரதியார்.

புனிதர்களும், ஞானிகளும் யோகிகளும் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தனர். அதனால் தான் அவர்கள் பெருவாழ்வு பெற்றனர். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற வள்ளலாரும், சூரியனையும், சந்திரனையும் உடன் பிறப்பாகக் கருதிப் பாட்டிசைத்து போற்றிய பிரான்சிஸ் அசிசியாரும், மீன்களோடும், பறவைகளோடும் கதை பேசி மகிழ்ந்த அந்தோனியாரும் இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டுகள்.

சூழலை நேசிப்பதும், பாதுகாப்பதும், வளர்ப்பதும் கடவுளின் திட்டம்; அவரது திட்டத்தை நிறைவேற்றுவது அவருக்குச் செய்யும் மிகச்சிறந்த வழிபாடு; அதுமட்டுமன்று மானுடத்துக்குச் செய்யும் மாபெரும் சேவை.

வாருங்கள்! சூழலை பாதுகாத்து
வாழ்வைப் பாதுகாப்போம்!"

- இணை ஆசிரியர்

**இறைவர்க்கு**
"உமது கை படைத்தவற்றை
அவர்கள் ஆளும்படி செய்துள்ளீர்"
*திருப்பா: 8/6*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மனித வரலாற்றில் ஏற்படும் எந்த ஒரு மாற்றமும் சுற்றுப்புறச் சூழலிலும் மாற்றத்தை விளைவித்தது. மனித வரலாற்றை, குலமரபுக் காலம், வேளாண்மைக்காலம், பண்ணைக்காலம், முதலாளித்துவக் காலம் என நான்கு காலங் களாகப் பிரிக்கலாம். ஒவ்வொரு காலமும் சுற்றுப் புறத்தை மேம்படுத்தவோ அல்லது சீர்குலைக் கவோ செய்தது. இனி ஒவ்வொரு காலமும் பற்றித் தெளிவாகக் காண்போம்.

### குலமரபுக் காலம்

இது மனித வரலாற்றின் தொடக்க காலமாகக் கருதப்படுகிறது. இதில் மக்கள் சிறுசிறு குழுக்க ளாகவும் குலங்களாகவும் வாழ்ந்து வந்தனர். தம் குலமரபு வாழ்விலும் குழுவாழ்விலும் அமைதியும், ஒற்றுமையும் நிலவியது போல் இயற்கையோடு அவர்கள் கொண்ட உறவிலும் அமைதியும் ஒற்றுமையும் நிலவியது. மக்கள் இயற்கையின் இயக்கத்தையும், செயல்பாடுகளையும் புரிந்து கொள்ள இயலாததால் அதைத் தெய்வம் எனக் கருதினர். இயற்கையில் இறைவனைக் கண்டனர். அது அவனது அறிவுக்கு அப்பாற்பட்டதாக அவன் கருதியதால் இயற்கைக்குக் கட்டுப்பட்டே வாழ்ந்தான்.

### வேளாண்மைக் காலம்

இந்தக் காலம் வேளாண்மை நீர்ப்பாசனம் போன்றவற்றால் ஏற்பட்ட முன்னேற்றத்தால் உருவான வரலாற்றுக் காலம். காட்டை அழித்துப் பயிரிடுவதற்கு ஏற்ற நிலங்களாகப் பண்படுத்தியதால் மரங்களை வெட்டினர். ஆனால் விவசாயத்திற்குப் பயன்படாத நிலங்களில் மரங்களை வளர்த்துச் சுற்றுப்புறச் சூழலின் சமநிலையைச் சரிகட்டினர். இயற்கையைத் தெய்வமாகப் பார்த்த நிலைபோய் தனக்கு நிகராக சமநிலையில் அதை கண்ணோக் கினான் மனிதன். இவ்வாறு மனிதன் இயற்கையைத் தனக்குச் சரிநிகர் சமமாகக் கருதினான். மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே கொடுக்கல், வாங்கல் முறை நிலவியது. இருவரும் ஒருவர் மற்றவரோடு மென்மையான உறவை ஏற்படுத்தினர். இந்த இரு காலகட்டமும் மனித வரலாற்றுக்கும், சுற்றுப்புறச் சூழலுக்கும் ஒரு பொற்காலமாகும். உலகம் மனிதனுக்கும், பிற படைப்புக்களுக்கும் ஒரு சொர்க்கமாகக் காட்சி யளித்தது.

### பண்ணைக் காலம்

இந்தக் கால கட்டத்தில் பண்ணையார் முறை வழக்கிலிருந்தது. மனிதர்களுக்கிடையே நிலமுடையோன், நிலமற்றோன் என ஏற்றத் தாழ்வுகள் ஏற்பட்டன. இதைப்போன்றே மனிதனு க்கும், இயற்கைக்கும் இடையே சமமற்ற படிநிலை உறவு ஏற்பட்டது. மனிதர்களுக்கிடையே பிளவுகள் இருந்தன. ஒருவன் மற்றவனைப் பகைவனாகக் கருதினான். இதே பகைமைக் கண்ணோட்டத்தோடு இயற்கையையும் பார்த்தான். இந்தக் காலக் கட்டத்தில்தான் அடிமை முறை வழக்கிலிருந்தது. நிலமற்ற கூலிகள் அடிமைகளாக பண்ணை யாளர்களால் நடத்தப்பட்டார்கள். நிலவலிமை, உடல் வலிமை உடையோர் ஆட்சியாளர்களாகவும் இவை இல்லாதோர் ஆளப்பட்டோராகவும் திகழ்ந்தனர். இவ்வாறு இயற்கை இயல்பிலேயே பணிவும், விட்டுக் கொடுக்கும் தன்மையுடையதாகவும் இருந்ததால் அதுவும் அடிமைகளுள் அடிமையாகக் கருதப்பட்டது. இங்கு இயற்கை மனிதனால் ஆளப்பட்டு அழிக்கப்பட்டது. இந்தக் கால கட்டத்தில்தான் மனுக்குலம் தன் சொர்க்க பூமியை இழந்தது.

### முதலாளித்துவ காலம்

இது அறிவியலின் தாக்கத்தால் உருவான காலகட்டம். நவீன கண்டுபிடிப்புக்கள் மூலமாக மனிதன் தொழிற்கூடங்களையும், பல்வேறு நிறுவனங்களையும் உருவாக்கினான். மேலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தொடர்ந்து இயற்கையின் மீது தன் ஆதிக்கத்தை செலுத்தி அடிமைப்படுத்தினான். அது பல்வேறு வழிகளில் அவமதிக்கப்பட்டு அழிக்கப்பட்டது. இந்தக் காலகட்டத்தில்தான் இயற்கை தன் சுயமதிப்பை இழப்பதை உணர்ந்து மனிதனின் செயல்களுக்கு எதிர்ச்செயல் செய்ய முனைந்தது. எஞ்சியிருக்கும் தன் ஆற்றலை ஒன்றுசேர்த்து மனுக்குலத்துக்கு எதிராக மௌனப் போராட்டம் நடத்தியது. மனிதன் மீது தனக்கிருக்கும் கோப வெறியாட்டத்தை வெளிக்காட்ட இவ்வாறு செய்யவில்லை. மாறாக தன்னை அழிவினின்று பாதுகாத்துத் தான் வாழும் உரிமையைத் தக்க வைத்துக்கொள்ள மனிதனோடு நடத்துகின்ற வாழ்க்கைப் போராட்டத்தின் விளைவே இந்த இயற்கையின் எதிர்ச்செயல்கள். இதை நாம் இயற்கையின் சீற்றம் என்கிறோம். எனவேதான் சுற்றுப்புறச் சூழல் சமநிலை யின்மையின் காரணமாக மானிடம் துன்புறுகிறது. நியூட்டனின் மூன்றாம் விதி "ஒவ்வொரு செயலுக்கும் இணையான எதிர்ச்செயல் உண்டு" இது இயற்கையின் செயல்பாடுகளுக்கும் பொருந்தும். இபபோதுதான் மானிடம் தான் இழந்த சொர்க்க பூமியை எப்போது காண்போம் என்று ஏக்கப் பெருமூச்சு விடுகிறது.

## சுற்றுப்புறச் சூழலைப் பேணிப்பாதுகாக்க வேண்டியதன் அவசியம்

சுற்றுப்புறச் சூழலால் மானிடம் அச்சுறுத்த ப்படுகிறது. இயற்கையின் அழிவு, உலகின் அழிவுக் காலம் நெருங்கிவிட்டதைக் காட்டுகிறது. மானிடத் தைப் பாதுகாக்க நம் வாழ்வில் இயற்கைக்கு முதன்மைத்துவம் கொடுத்து நம் மதிப்பீடுகளை மறு பரிசீலனை செய்ய வேண்டும். தான் இழந்த தன் வாழ்வின் பங்கை நம்மிடமிருந்து ஈடுசெய்ய இயற்கை வன்முறை மூலமாக நம்மேல் சீறி எழுவதற்கு முன் நாம் விழித்துக் கொள்ள வேண்டும். அதன் தேவைகளை தாராளமாக நிறைவேற்ற முன்வர வேண்டும். அறிவியல் தொழிநுட்ப முன்னேற்றம் ஒன்றே சுற்றுப்புறச் சூழலை சமநிலைக்கு கொண்டு வரும் என்பது தவறு. மாறாக குலமரபு வாழ்க்கை முறையின் முக்கிய அம்சங்களை நம் வாழ்வில் மாற்று மதிப்பீடு களாகப் பின்பற்றினால் இயற்கையை நாம் சமநிலைக்குக் கொண்டுவர இயலும்.

மானிட வரலாற்றின் காலடிச் சுவடுகளைப் பின்நோக்கிப் பார்த்தோமானால் மேற்கத்தேய அறிவியலும், தொழில் நுட்பமும் கிறிஸ்துவப் பண்பாட்டின் துணை உற்பத்திப் பொருட்களாகும். இது மறுக்க முடியாத உண்மை எனினும் சுற்றுப்புறச் சூழல் சூறையாடலில் பெரும் பங்கு வகிப்பதும், மேற்கத்திய அறிவியலும், தொழிநுட்பமுமாகும். மிக நுணுக்கமாகச் சிந்தித் தோமானால் இயற்கையைக் கட்டிக் காக்கும் கடமை நமக்குரியது என்பது விளங்கும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம், "திருச்சபை, காலத்தின் கோலத்திற்கு ஏற்ப தன்னை மாற்றிக்கொள்கிறது:, என்கிறது. புனித பிரான்சிஸ் தம் சகோதரர்களுக்கு எழுதிய மடல்களில் காலத்தின் அருங்குறிகளுக்கு ஏற்ற அப்போஸ்தலப் பணியை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார். இதை மையமாகக் கொண்டு திருச்சபையின் அங்கத்தி னர்களாகிய நாம் நாட்டிற்கும், கலாசாரத்திற்கும், பண்பாட்டிற்கும், ஏற்ப நம் இறைபணியைத் தழுவுவது அவசியம்.

**பணி. அல்போன்ஸ் சார்லஸ்,**

- ஒரு தேக்கரண்டித் தேனை இரவில் படுக்கும் போது அருந்தினால் அடிக்கடி சிறு நீர் கழிக்கும் குழந் தைகளுக்கு நல்லது. குழந்தையின் உடல் வளர்ச்சி நன்றாக இருக்கும் தொற்று நோய்களை விரட்டும் தேனைத் துளசிச் சாற்றில் கலந்து குடித்தால் சளி, தொண்டை வீக்கம் நீங்கும்.

- தேய்த்து முடிந்த சோப் துண்டு களைக் குப்பையில் வீசாமல் கழுவு வதற்காக வைத்திருக்கும் துணிப் பெட்டிக்குள் போட்டு வைத்தால் வியர்வை நாற்றம் இல்லாமல் இருக்கும்.

சிவலிங்கம் சுமதி, ஏறாவூர்-4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் எந்த வகைப் பெற்றோர்?



குழந்தைகளுக்கு நீங்கள் கொடுக்கின்ற ஒழுங்கு முறைகளும், விதிகளும் உங்களுடைய வாழ்க்கை முறை (Life style) மற்றும் ஆளுமையைச் (Perrsionality) சார்ந்தே இருக்கிறது. உங்களின் சிந்தனை வளர்ச்சியைப் பொறுத்தும், குழந்தைகளிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்பதைப் பொறுத்தும் கூட ஒழுங்கு முறைகள் இருக்கும். சாதாரணமாகக் குழந்தைகளைக் கூர்ந்து கவனித்தாலே இதனைப் புரிந்து கொள்ளலாம். இது போன்று குழந்தைகளுக்கு விதிக்கும் ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் சில மாதிரிகள் இங்கு தரப்பட்டுள்ளன. இதில் ஏதேனும் ஒரு வகையைச் சார்ந்தோ அல்லது சில வகைகள் சேர்ந்தோ உங்களுக்கு இருக்கலாம்.

**அதிகாரத்துவமான பெற்றோர்**

இறுக்கமான அல்லது கடுமையான ஒழுங்குமுறைகளை அமைத்திருப்பீர்கள். நீங்கள் என்ன சொல்லப்போகிறீர்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியாமல் உங்கள் குழந்தை எப்பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டே இருக்கும்.

**ஜனநாயகமான பெற்றோர்**

தெளிவான ஒழுங்கு முறைகளை வீட்டில் பின்பற்றுவீர்கள். குழந்தைகளுக்கும் தெளிவாக விளக்கிப் புரியவைத்திருப்பீர்கள்.

**சாதாரணமான பெற்றோர்**

குழந்தைகளின் விருப்பத்துக்கேற்ப செயல்பட அனுமதிப்பீர்கள். எல்லை எதுவரையென நினைக்கிறீர்களோ அதுவரை அவர்கள் செயல்பட அனுமதிப்பீர்கள். தான் விரும்பியதை எல்லாம் தேர்ந்தெடுத்துக் கொள்ள அனுமதிப்பீர்கள். குழந்தைகள் தாங்களாகவே சுய கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்ள எளிதாக இருக்கக்கூடிய ஒழுங்கு முறைகளையும் கட்டுப்பாடுகளையும் அவர்களுக்கு விளக்கிப் புரியவைத்து விடுங்கள்.

இதற்கு அவர்களுக்கான செயல் நெறி தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கவேண்டும். குடும்பச் சூழல் அவர்களுக்கு எப்பொழுதும் நேசிக்கத் தக்கதாகவும் ஆதரவானதாகவும் இருக்க வேண்டும். ஏற்பான இந்த முறையால் ஒழுங்குகளைக் குழந்தைகளுக்கு இயல்பாகக் கற்றுக்கொடுக்கலாம். இதனால் கெட்ட பழக்கங்களைக் குழந்தைகள் கற்றுக்கொள்வதில் இருந்து தவிர்த்துவிடவும் முடியும்.

## சூழலைக் காத்திடுவோம்!

சூழலைக் காத்திடுவோம் - தோழர்களே
சூழலைக் காத்திடுவோம்!

சுற்றுப் புறங்கள் எங்ஙணுமே
கூட்டித் துப்பர வாக்கிடுவோம் - ஒரு
தூசு துரும்பு இலாமலே - இங்கு
தூய்மை பேணிடுவோம்!

காடு வெட்டி அழிப்பதனால் - நாடு
மாரி யின்றித் தவித்திடல் பார்!
மரம் வளர்ப்போம் செடி வளர்ப்போம்
மழை வளம் காண்போமே!

ஆலையும் சாலையும் அழிக்குது! சூழலை
யாரறிவார்? நம்துயர் களைவார்?
பாலை வனமாய் மாறும் உலகில்
பசுமைப் புரட்சி செய்திடுவோம்!

சூழலைக் காத்திடுவோம் - தோழர்களே
சூழலைக் காத்திடுவோம்!

- வீக்கேயெம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறவற வாழ்வில் பொன்விழாக் காணும்

## அருள் தந்தை யோசப்மேரி [யே.ச.] அடிகள்

### -ஒரு நேர்முகம்-



*[யோசப்மேரி சுவாமிகள் என்றால் தெரியாதவர்கள் இல்லை. இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் இவரது பெயர் பிரபலமானது. இவர் ஒரு கத்தோலிக்க துறவியாயினும் மதங்கடந்து கௌரவிக்கப்பட்டவர். பல தசாப்தங்களாக இலங்கைத் தமிழ் மக்களது அரசியல் வரலாற்றோடு தன்னைப் பிணைத்துக் கொண்டு அநீதிக்கெதிராக மேடையேறி முழங்கிய தமிழ்த் துறவி. இவருக்குப் பன்முனைப் பரிமாணங்கள் உண்டு. துறவற வாழ்வில் இணைந்து ஐம்பது ஆண்டுகளை நிறைத்துக்கொண்ட இந்த அறுபத்து எட்டு வயது இளைஞரைத் தொண்டன் வாசகர்களுக்காகச் சந்தித்தோம்.]*

**தாங்கள் ஒரு குருவாக துறவறவாழ்வைத் தெரிந்து கொள்ள தூண்டுதலாக இருந்த காரணிகள், அல்லது வழிகாட்டியவர்கள் பற்றிக் கூறுங்கள்.**

ஒரு வழிகாட்டுதல் இல்லாம நிச்சயமா துறவறத்துக்குள் போயிருக்கமுடியாது. முதல்ல குடும்பம்தான் எங்கட வழிகாட்டி. என்ட பெற்றோர் பக்தியுள்ளவங்க. அவங்கட தூண்டுதல் முதல் காரணம். எங்கட அம்மா திருயாத்திரை, கோயில் காக்க எண்டெல்லாம் கூட்டிக் கொண்டு போவாங்க. அப்ப நடந்த நிகழ்ச்சி ஒண்டு எனக்கு நினைவுக்கு வருது. அப்ப எனக்கு 10, அல்லது 12 வயதிருக்கும். நான் மிக்கேல் கல்லூரியில் படிச்சுக்கொண்டிருக்கிறன். கோயில் காக்க எண்டு அம்மா எங்கள தாண்டவன்வெளி கோயிலுக்கு கூட்டிக்கொண்டு போனவ. ஒரு 10.00 மணிபோல 'அம்மா எனக்கு பசிக்குது' எண்டு சொன்னன். சரி வாங்க எண்டு கூப்பிட்டா. எங்க எண்டு கேட்டன். போய் பிச்சை கேட்பம் எண்டா. எனக்கு ஒரே அதிர்ச்சி, வெட்கம் ஒரு பக்கம். ஏனெண்டா தாண்டவன்வெளியில என்னோட படிக்கிற மாணவர்கள் எல்லாம் இருந்தாங்க ஆனா அம்மா சொன்னா, 'இதுதான் நேர்த்தி. கடவுளுக்காக எங்கள நாங்களே எளிமையாக்கிறது.' எண்டு சில வீடுகளுக்கு போய் பிச்சைகேட்டம்... இப்படி எல்லாம் பழக்கப்பட்டு இந்தத் துறவறவாழ்வில் ஆர்வம் ஏற்பட காரணமாக இருந்தவங்க பெற்றோர்தான்.

அடுத்து Fr. சொமர்ஸ் என்ட அமெரிக்க இயேசு சபைக் குருவானவர். இவர் எங்களுக்கு மைக்கல்ஸ்சில டிரெக்டராக இருந்தவர். நான் S.S.C படிச்சுக்கொண்டிருந்த நேரம் அப்போது மாணவர்களுக்கு ஒரு கேள்விக்கொத்து தந்தாங்க. அதில ஒரு கேள்வி பிற்காலத்தில என்ன செய்யப்போறீங்க? என்று கேட்டிருந்தாங்க. நான் ஏழைகள், வறியவர்களுக்கு சமூக சேவை செய்யப்போறன் எண்டு எழுதினனான். சில நாளைக்குப் பிறகு Fr. சொமர்ஸ் என்னைக் கூப்பிட்டுக் கதைத்தார். நான் மட்டும்தான் இந்தக்கேள்விக்கு இப்படி பதில் எழுதினதாகச் சொன்னார். அதோட எங்கட குருக்கள் குறைவு. நீ குருவாய்ப்போனா சமூக சேவையும் செய்யலாம். மற்றவர்களுக்கு ஆறுதலாகவும் இருக்கலாம். இதப்பற்றி நீ யோசிக் கல்லயா? என்று கேட்டார். அதுக்குப் பிறகு எனக்கும் குருவாக வேண்டும் என்ற எண்ணம் வந்துட்டுது. பெற்றோருக்கு அடுத்து என்னோட நெருங்கி நின்று எனக்கு வழிகாட்டியவர் Fr. சொமர்ஸ் தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீங்க ஒரு மறைமாவட்டக் குருவாகி பணி செய்யாமல் ஒரு துறவறச் சபையில் சேர்ந்ததற்குக் காரணம் என்ன?**

அப்போதயச் சூழலில் அமெரிக்காவைச் சேர்ந்த யேசுசபைக் குருக்கள்தான் எல்லா இடமும் நிறைஞ்சிருந்தாங்க. மறைமாவட்டக் குருக்கள் சிலர் இருந்தாலும் கூட இயேசு சபையினர்தான் அதிகம். அவங்கதான் இந்தமறை மாவட்டத்தையும் கட்டி வளர்த்தவங்க. அத்துடன் இயேசு சபையினரால் நடத்தப்பட்ட மைக்கல் கல்லூரியில்தான் படிச்சுக்கொண்டிருந்தன். இதனால எனக்கு இயேசுசபையில ஓர் ஈடுபாடு ஏற்பட்டது. அதிலேயே சேர்ந்து கொண்டன்.

**இயேசு சபை நீண்ட கால கல்விப்பயிற்சியும், களப்பயிற்சிகளும் அளிக்கின்ற விதிமுறைகளைக் கொண்ட ஒரு சபை. உங்கள் பயிற்சிகள், அக்கால அனுபவங்களைக் கூறலாமே!**

நான் இயேசுசபையில் இணைந்து (1954) இந்தியாவுக்கு உடனே அனுப்பப்பட்டேன். அங்க ஒரு மாதம் நாளாந்த நடைமுறைகள் பற்றிக் கற்றுக்கொடுக்கப்பட்டது. அதற்குப் பிறகு எங்களுக்கு அங்கி கொடுக்கப்பட்டது. இந்தக் காலப் பகுதி எனக்கு மிகவும் கடினமாக இருந்தது. பெற்றார், சகோதரர்கள், நண்பர்களின் பிரிவு என்னை மிகவும் வாட்டியது. அத்தோடு இந்தியாவில் அப்போதிருந்த சமூகச் சூழல் கடுமையான வறுமை, கஷ்டங்கள். அப்போதுதான் இந்தியா சுதந்திரமடைந்திருந்தது. இந்தச் சூழ்நிலைகள் கொடுத்த அழுத்தத்தால நான் இலங்கைக்குக் திரும்பிப்போக முயற்சித்தன் ஆனால் அங்க இருந்த குருக்கள் கொடுத்த ஆறுதலாலயும் உற்சாகத்தாலயும் இலங்கை திரும்புற எண்ணத்தைக் கைவிட்டன். அதுக்குப் பிறகு 2 வருஷம் நவ சந்நியாசம். சபை விதிகளைப் பற்றி அறிந்துகொண்டதோடு இலத்தீன், ஆங்கில மொழிகளையும் படிப்பித்தார்கள். இரண்டு வருடங்களுக்குப் பிறகு வார்த்தைப்பாடு. அதற்குப்பிறகு இன்னும் இரண்டு வருடம் இலத்தீன், ஆங்கிலம், சமஸ்கிருதம், வரலாறு, சமயங்கள் தொடர்பான கல்வி இடம்பெற்றது. அதற்குப்பிறகு தத்துவம் பயில்வதற்காக தமிழ் நாட்டிலுள்ள செண்பகனூர் (1958) என்னுமிடத்துக்கு வந்தன். இங்கு மூன்று வருடக்கல்வி. அதன் பின்பு மூன்று வருடம் கற்பித்தல், மற்றும் வேறு துறைகளில் படிக்கலாம். நான் இலங்கைக்கு வந்து (1961) திருகோணமலை புனித யோசப் கல்லூரியில ஒரு வருடம் படிப்பிச்சன். அதன்பிறகு தமிழ் படிக்கிறதுக்காக மட்டக்களப்பிற்கு வந்து பாலபண்டிதம் படிச்சன். இதற்கு வித்துவான் கமலநாதன் அவாகள்தான் என்னைப் பயிற்றுவித்தார். அதன்பிறகு பண்டிதம் தேர்வுக்காக வித்துவான் வி.சி.கந்தையா அவர்களிடமும், பண்டிதர் சபாபதிப்பிள்ளை அவர்களிடமும் படித்தன். அதன் பின்பு இறையியல் பயில்வதற்காக மீண்டும் இந்தியவுக்குப் போனன். அங்கு நான்கு வருட கல்விக்குப் பிறகு 1969ம் ஆண்டு குருப்பட்டம் பெறுவதற்காக இலங்கைக்கு வந்தன். அப்போதுதான் 2ம் சத்திக்கான் சங்கம் ஏற்படுத்திய மறுமலர்ச்சி பரவிக்கொண்டிருந்த காலம். என்னுடைய குருப்பட்ட நிகழ்வு அலங்காரங்கள் எல்லாம் எங்களுடைய தமிழ்க் கலாசார மரபுக்கேற்ப இடம் பெற்றது. இது குருக்கள் உட்பட அனைவருக்கும் புதுமையாகவும், வித்தியாசமானதாகவும் இருந்தது.

**தாங்கள் பண்டிதம் பயின்றதாகத் தெரிவித்தீர்கள். இவ்வாறு மரபுத்தமிழை ஆழமாகப் பயின்ற தாங்கள் அதனைப் போதுமான அளவு அதாவது படைப்பு, இலக்கியம், கற்பித்தல், ஆய்வு என்று எந்த வகையிலுமே அதனை வெளிப்படுத்தவில்லையே! காரணம் என்ன?**

முதலாவது கற்பித்தல் துறையில் நான் ஈடுபாடு கொள்ளவில்லை. கற்பித்தலில் ஈடுபட்டிருந்தால் எனது தமிழ் அறிவை மேலும் வளர்ப்பதற்கும் அதனைப் பல்வேறு வகையில் வெளிப் படுத்துவதற்கும் வாய்ப்பாகியிருக்கலாம். சிறுவயதிலிருந்தே எனக்குள் பிரவகித்த தமிழ் ஆர்வமும், சமூகப் பணியில் இருந்த ஈடுபாடும் இந்நாட்டில் மனித உரிமை மறுப்புக்கு எதிராகவும், நீதிக்காகவும் உழைக்கத் தூண்டின. இதன் காரணமாக என்னை அரசியல்வாதியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் முத்திரை குத்தினர். நான் பாதிக்கப்பட்ட மக்களுக்காகக் குரல் கொடுக்க அரசியல் மேடைகளில் ஏறினாலும் 2ம் வத்திக்கான் சங்க ஏடுகளின் வழிகாட்டலின்படி எமது மொழியை, கலாசாரத்தை மனித மாண்பைக் காப்பதற்காக உழைத்தேனே அன்றி அரசியல்வாதியாகச் செயற்பட்டதில்லை. நான் தமிழ் மொழித்துறையில் நேரடியாக ஈடுபடாமைக்கு இதுவும் ஒரு காரணமாகும்.

**'இன்று தாராண்மை வாதம், உலக மயமாக்கல் இவற்றின் காரணமாக வளர்ந்து வரும் நுகர்வுக் கலாசாரம், உணர்வு வெறி, ஆடம்பர வாழ்க்கை மீதான மோகம் போன்றவை துறவறவாழ்வுக்கு ஒரு சவாலாக விளங்குகின்றனவா?**

பதில்: உண்மைதான் வருங்காலச் சந்ததி எந்தளவிற்கு துறவறத்தில் ஆர்வம் கொண்டு ஈர்க்கப்படும் என்னும் பயம் எனக்கு இருக்கிறது. நீங்கள் சொல்வது போல் இன்றைய கலாசாரம் வித்தியாசமானது. T.V. வீடியோ, கம்பியூட்டர் என்று அனைத்துச் சாதனங்களும் நம்மைக் கட்டிப்போடுகின்றன. இவற்றால் எவ்வளவோ நன்மைகளைப் பெறமுடியுமென்றாலும், துறவற வாழ்வுக்கும் அதன் மேன்மைக்கும் இவை உதவ முடியுமென்றாலும் இதைக் கையாவதில் உள்ள கட்டுப்பாடற்ற தன்மையாலும், இவைபற்றிய அறிவின்மையாலும், பல தேவையற்ற விளைவுகள் உருவாகக்கூடிய வாய்ப்புள்ளது. ஆனால் துறவறவாழ்வு என்பது ஒரு தொழில் அல்ல; அது ஒரு தேவ அழைத்தல். ஆண்டவரின் அருள்வலிமையோடுகூடிய ஓர் அர்ப்பணம். இந்த உணர்வு இருந்தால் துறவற வாழ்வுக்கு எதுவுமே ஒரு தடையாக இருக்க முடியாது. ஆனால் இளைய சந்ததிக்கு இது மிகவும் கடினமானதுதான்.

**நீங்கள் ஒரு துறவியாக, குருவாக, சமுகப் பணியாளராக இருக்கின்ற அதேவேளை கலைத் துறையிலும் ஈடுபாடு கொண்டுள்ளீர்கள். உங்கள் கலை முயற்சிகள், சாதனைகள் பற்றி....**

சிறுவயதிலிருந்தே எனக்குக் கலைத்துறையில் ஈடுபாடுள்ளது. எங்கள் வீட்டுக்கு முன்னால் கூத்துக்களரி போட்டுக் கூத்தாடுவார்கள். அப்ப நான் நினைச்சன் வளர்ந்த பிறகு நானும் கூத்தாட வேணும் எண்டு. கூத்தைப் பற்றி முன்பு ஒரு 'மலிவான' எண்ணம் இருந்தது. அதை உடைத்து கூத்துக்கலையை வளர்க்க வேணும் எண்டு விரும்பினன். பிறகு நான் சபையில் சேர்ந்து இந்தியாவில் பயிற்சி பெற்றுக்கொண்டிருந்தபோது அங்கு நடத்தப்பட்ட மேடை நாடகங்களில் எனக்கு பங்குபற்ற வாய்ப்புக் கிடைத்தது; பாராட்டும் கிடைத்தது. அதன் பின்பு நான் திருகோணமலை யோசப் கல்லூரியில் படிப்பித்துக் கொண்டிருந்தபோது ஊதாரிப்பிள்ளை உவமையை அடிப்படையாக வைத்து 'மன்னிப்பு' என்றொரு நாடகத்தை மேடையேற்றினேன். ஆசிரியர்கள் நடித்த இந்த நாடகம், அதில் பயன்படுத்திய உத்திகள் மிகவும் பாராட்டுப் பெற்றது இதுவே எனது முதலாவது படைப்பாகும். இதற்குப் பின்பு நான் குருவாகி, திருகோணமலை சீனன் வாடிப் பங்கில் பணிபுரிந்து கொண்டிருந்தபோது இயேசுவின் போதனைகளையும் வாழ்க்கை நிழ்ச்சிகளையும் அடிப்படையாகக் கொண்ட 'நீ எதிர் கொண்டதேன்' என்ற நாட்டிய நாடகம் ஒன்றைத் தயாரித்து மேடை ஏற்றினேன். இதற்கான கதையை நான் கூறக் கூற கவிஞர் தமிழ்த்தாசன் பாடல்களை இயற்றினார். முன்னாள் போதகர் அமல்ராஜ் இதற்கு இசையமைத்தார். ஆசிரியை திருமதி. மனோகரி கந்தசாமி அவர்கள் நடனங்களைப் பயிற்றுவித்தார். பல மாதமுயற்சிக்குப் பின்னும் பயிற்சிக்குப் பின்னும் இந்த நாட்டிய நாடகம் திருகோணமலையில் மேடையேற்றப்பட்டது. பின் மட்டக்களப்பிலும், வடபகுதியிலும், மலைநாட்டிலும் மேடையேற்றப்பட்டு பெரும் வரவேற்பைப் பெற்றது. இதைத் தயாரித்த அனுபவம் மிகவும் சுவையானது. இதனை ஒரு சாதனை என்றே சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தாங்கள் அரசியல் அரங்கிலும் இனங்காணப்பட்டுள்ளீர்கள். இந்த அரசியல் ஈடுபாடு எவ்வாறு ஏற்பட்டது?**

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அநீதிகள் பற்றி, மொழிக்கு, நிலத்துக்கு ஏற்படுத்தும் அழிவுகள் பற்றி தமிழ் அரசியல் தலைவர்கள் பேசுவதைக் கேட்கின்ற வாய்ப்பு எனக்கு சிறுவயதிலேயே கிடைத்தது. இதன் காரணமாக நான் ஈர்க்கப்பட்டேன். நான் இந்தியாவில் படித்துக்கொண்டிருந்தபோது பேராசிரியர் Fr. கிளம் என்பவர் ஒரு முறை கூறினார்: திருச்சபையில் தொழிலாளர்கள், அவர்களது உரிமைகள் பற்றி மிகச்சிறந்த சாசனங்கள் இருக்கின்றன. நாம் அவற்றைக் கவனிக்காததால் கம்யூனிசம் தொழிலாளர்களைத் தன்பக்கம் இழுத்துக்கொண்டு பெரிதாக வளர்ந்துவிட்டது. திருச்சபையின் போதனைப்படி தொழிலாளர் பக்கம் நாம் நின்று பேசியிருந்தால் இந்த நிலை வந்திருக்காது என்று சொன்னார். இது எனக்குள் ஒரு விழிப்புணர்வைக் கொண்டு வந்தது. தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படுகின்ற அநீதிகளைப் பார்த்துக்கொண்டும் 'நாங்க சுவாமிமார்' என்று வாயை மூடிக் கொண்டு இருக்கக்கூடாது. அநீதிக்கு எதிராகப் பேச வேணும் எண்டு நான் துணிச்சலோடே முன் வந்தன். அப்போது என்னோட உடன்படித்த பலர் என்னைத் தடுத்தாங்க. 'அரசியல்ல கூட ஈடுபட்டா வீட்டுக்கு அனுப்பிப் போடுவாங்க' எண்டு தடுத்தாங்க. ஆனா இது அரசியலா எனக்குப் படல்ல. அநீதிக்கு எதிராகப் போராடுறது குருக்களுடைய கடமை. திருச்சபையே வத்திக்கான் சங்க ஏட்டில் இதனைத் தெளிவாகக் கூறியிருக்கு. 'சமயத்துக்கு எதிராக, மொழிக்கு எதிராக, கலாசாரத்துக்கு எதிராக, ஓர் இனத்துக்கு எதிராகச் செய்யப்படும் அனைத்து அநீதிகளும் எதிர்க்கப்படவேணும். அதற்கு எதிராய்ப் போராடவேணும் எண்டு சொல்லியிருக்கு. அதனாலதான் நான் துணிச்சலா அரசியல்ல இறங்கினனான். ஆனா கட்சி அரசியல்ல ஈடுபடுறது என்னுடைய நோக்கமல்ல. என்னைச் சரியாகப் புரிந்து கொண்ட குருக்களும், ஆயர்களும் எனக்கு உற்சாகம் தந்து உறுதுணையாக நின்றார்கள்.

**தாங்கள் அரசியல் ஈடுபாடு கொண்ட குரு என்ற வகையில் தற்போது சமாதான முயற்சிகளில் தோன்றியுள்ள முட்டுக்கட்டைகள், பிரச்சினைகள், இவற்றின் எதிர்காலம் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

தடைகள், முட்டுக்கட்டைகள் வரலாம். ஆனால் இறுதியில் நீதி வெல்லும்; நிச்சயம் சமாதானம் மலரும். நமக்குள் ஏற்படும் பிரச்சினைகள், அழிவுகள் எல்லாம் நாம் விதைத்தவை. நமது குற்றங்களுக்கும் நாம் செய்த பிழைகளுக்கும் கொடுக்கின்ற விலைகள் அவை. ஆனால் இறுதியில் சமாதானம் நிலைபெறும் என்பது உறுதி.

**இறுதியாக துறவற வாழ்வில் பொன் விழாக்காணும் தாங்கள் இன்றைய இளையவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

துறவறம் என்பது ஓர் அர்ப்பணம். அது ஒரு மேலான வாழ்க்கை முறை. கடவுளுக்காக, மக்களுக்காக, சமூகத்துக்காக தம்மை அர்ப்பணிக்கின்ற துறவிகள் அதிகளவு தேவைப் படுகின்றார்கள். ஆனால் துறவறத்தை விரும்புவோர் குறைந்து கொண்டே வருகின்றனர். எல்லா மதங்களிலும் இது உணரப்படுகிறது. ஆகவே எந்த மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் சரி துறவற வாழ்வைத் தெரிந்து கொள்ள, தங்களை அர்ப்பணிக்க இளையவர்கள் முன் வரவேண்டும்.

நேர் கண்டவர்: *மலர்வேந்தன்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவு



- உலகில் மிகவுயர்ந்த மலைச் சிகரம் எங்கே அமைந்துள்ளது?
  - ஆசியாவில்

- உலகில் மிகப் பெரிய ஏரி?
  - கஸ்பிற்

- இந்தியாவின் முதல் தேசிய பூங்கா எது?
  - கோர்பெட் நேஷனல் பார்க்

- பொப்பி என்ற செடியில் இருந்து எடுக்கப்படும் போதை மருந்தின் பெயர் என்ன?
  - ஓபியம்

- பூமியின் துணைக் கோள் எது?
  - சந்திரன்

- 7 மலைகளின் நகரம் எது?
  - ரோம்

- இலங்கையின் தமிழ் பத்திரிக்கை எத்தனையாவது ஆண்டு முதன் முதலாக வெளிவந்தது?
  - 1841ம் ஆண்டு

- ஒரே நேரத்தில் கிரிக்கெட் விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்த மூன்று ஆஸ்திரேலிய வீரர்கள் யார்?
  - லில்லி, கிரேப்சேப்பல், மார்ஷ்.

- சர்வதேச அரிசி ஆராய்ச்சி நிறுவனம் நிறுவப்பட்டுள்ள இடம் எது?
  - பிலிபீன்சு

- உலகில் சக்கரை பந்தல் என அழைக்கப்படும் நாடு எது?
  - கியூபா

- மிருக நோய் பற்றிய சர்வதேச ஆராய்ச்சி நிலையம் நிறுவப்பட்டுள்ள இடம் எது?
  - கென்யா

- நீராவி இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் யார்?
  - ஜேம்ஸ்வாட்

- அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த போது பதவி விலகியவர்?
  - ரிச்சர்ட் நிக்சன்

- இரண்டாம் உலகப் போரின்போது இங்கிலாந்து ராணுவ வீரர்களுக்கு சூட்டப்பட்ட பெயர் என்ன?
  - டாம்மி

சிவலிங்கம். சுமதி
ஏறாவூர் - 4 ரிக்லஸ் ஆலயம்.
செங்கலடி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறை அறிவை வளர்ப்போம்



இஸ்ரயேல் மக்கள் எகிப்தில் சூசை இருந்தபோது அங்கே சென்று குடியேறினார்கள். சூசை எகிப்து நாட்டைப் பஞ்சகாலத்தின் கோரங்களுக்கு உட்படாமல் காத்தமையினால் இஸ்ரயேலருக்குச் சிறந்த வாழ்வு அமைந்தது. ஆனால், காலப்போக்கில் இந்நிலை மாறியது. மன்னர்கள் இவர்களை அடிமைகள் போல நடத்தத் தொடங்கினர். எனவே, எகிப்தில் இஸ்ரயேல் அடிமைத்தனத்தில் வாழந்தனர்

இஸ்ரயேலரின் தொகையோ நாளுக்கு நாள் அதிகரித்துக் காணப்பட்டது. எனவே, ஒரு நாள் ஒரேபு மலையடிவாரத்தில் ஆட்டுமந்தைகளை மேய்த்துக் கொண்டிருக்கையில் இறைவன் எரிகின்ற முட்செடியின் நடுவே காட்சி கொடுத்து அவரை அழைத்தார். எகிப்தில் அடிமைகளாக வாழும் இஸ்ரயேலரை மீட்டு வருமாறு கேட்டுக்கொண்டார். அதையேற்றுப் பார்வோனிடம் சென்று இஸ்ரயேல் மக்களை விடுதலை செய்து தம்முடன் அனுப்புமாறு கேட்டார். மன்னன் மறுத்தான். இறைவன் மோசே மூலமாக எகிப்தியர் மீது பத்துத் துன்பங்களை அனுப்பினார். இறுதியான துன்பம் எகிப்தியரின் தலைப்பிள்ளைகளான ஆண்குழந்தைகள் எல்லோரும் கொல்லப்பட்டதாகும். பார்வோனின் தலைப் பிள்ளையும் இறந்ததால், மனம் மாறிய அவன் இஸ்ரயேலர் எகிப்தை விட்டு வெளியேற அனுமதித்தான். எனவே, அவர்கள் சூசையின் எலும்புகளையும் எடுத்துக்கொண்டு சென்றனர். (விடுதலை பயணம் 13:19)

## இஸ்ரயேல் மக்களின் வீரத்தலைவன் மோசே

எபிரேயப் பெண்களுக்குப் பிறக்கும் ஆண் குழந்தைகளைக் கொல்லும் படிபார்வோன் மன்னன் அங்கு பணி புரியும் மருத்துவப் பெண்களுக்குக் கட்டளை யிட்டான். அவர்களோ கடவுளுக்குப் பயந்து வாழ்ந்ததால் மன்னன் சொன்னதைச் செய்ய வில்லை. இறுதியாக, மன்னன் பிறக்கும் ஆண் குழந்தைகள் அனைத்தையும் நைல் நதியில் எறிந்து விடும்படி கட்டளையிட்டான். இவ் வேளையில்தான் மோசே பிறந்தார்.

அவரது தாய் பயந்து, நாணற்புல்லால் ஒரு பேழையைச் செய்து, குழந்தையை அதனுள் வைத்து நைல்நதிக்கரையில் விட்டாள். அங்கே நீராட வந்த பார்வோனின் மகள் அவரைக் கண்டெடுத்து "நீரிலிருந்து எடுத்தவன்" எனும் பொருள் தரும் மோசே எனும் பெயரிட்டு, அரண்மனைக்குக் கொண்டு சென்று வளர்க்கத் தொடங்கினாள். அரசகுமாரனுக்குரிய சகல வசதிகளையும் பெற்று வளர்ந்த மோசே, இளைஞனான வேளையில் தானும் இஸ்ரயேலன் என்பதையறிந்து கொண்டார். இஸ்ரயேலன் ஒருவனை எகிப்தியன் ஒருவன் துன்புறுத்துவதைக் கண்டதும் அவனைக் கொன்று விட்டார். உடனே மன்னனுக்குப் பயந்து மிதியான் நாட்டுக்கு ஓடினார் மோசே. அங்கு இத்திரோவின் மகளை மணஞ்செய்து, ஆட்டுமந்தையை மேய்த்து வாழ்ந்து வந்தார்.

இவர்கள் வாக்களிக்கப்பட்ட பூமிக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். செங்கடல் அருகே பாளையம் இறங்கியிருக்கையில், பார் வோன் படையெடுத்து வந்தான். இஸ்ரயேலர் மோசேயைக் குறை கூறினர். மோசே இறைவனிடம் முறையிட்டார். பின் இறை கட்டளைப்படி தம் கைக்கோலை நீட்டச் செங்கடல் இரண்டாகப் பிரிந்தது. மக்கள் கடல் நடுவே காணப்பட்ட வரண்ட தரையினூடாக நடந்து சென்றனர். பின்னால் துரத்தி வந்த எகிப்தியப் படைகள் கடல்மூடி அழிந்தன. பழைய உடன்படிக்கையில் மிகச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியாக விடுதலைப்பயணம் காணப்படுகிறது. மோசே ஒரு மக்கள் தலைவர், வீரர், இறைவாக்கினர், மீட்பர் இறைவனை நேருக்கு நேர் கண்டவர். இணைச்சட்ட நூல் 34ம் அதிகாரம் 10ம் திருவசனத்தில் இவர் போற்றப்படுகிறார்.

மெற்றில்டா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மஞ்சரி

ஆழியோன்

## திருக்குறளில் ஆட்சியாளர்

இன்று இலங்கையிலும் ஆட்சிமாற்றம் ஏற்பட்டு விட்டது. ஒரு நாடு சிறப்புற அமைய வேண்டுமானால் அரசியலாளர்கள் சிறப்பாக ஆட்சிபுரிய வேண்டும். இவ்வகையில் அரசிய லாளனுக்கு வள்ளுவன் கூறிய கருத்துக்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

தமிழக இலக்கிய வரலாற்றில் நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த காலத்தில் திருக்குறள் தோன்றியதாகச் சொல்லப்படுகிறது. அக்காலத்தில் நிலமானியச் சமூகம் தாபகமான காலகட்டம் என்பதனால், நிலமானியச் சிந்தனைகள் பலவற்றைத் தன்னுள் வாங்கிய ஒன்றாக திருக்குறள் காணப்படுகிறது என்பது ஆய்வாளர் கருத்து. இவ்வகையில் குறள் பற்றிய கருத்துக்கள் அக்கால நிலமானிய அரசுக்குக் கூறப்பட்ட அறிவுரைகளாக இருப்பினும், அக்கருத்துக்கள் எக்கால அரசுகட்கும் பொருத்தமானவையாகவே காணப்படுகின்றன.

அரசியல் தொடர்பாய் வள்ளுவர் கூறிய கருத்துக்கள் மூன்று வகைக்குள் அடக்கப்படலாம்.

1. அரசியலாளனுக்குக் கூறப்பட்டவை.
2. குடிமக்கள் நலன் பொருட்டுக் கூறப் பட்டவை.
3. உலகத்தாருக்குப் பொதுவாகக் கூறப் பட்டவை.

தனது அரசியல் பற்றிய முதற்குறளிலேயே, அரசனானவன் பின்வரும் ஆறு அம்சங்கள் கொண்டவனாக இருக்கவேண்டும் என வள்ளுவர் செப்புகிறார்.

படை(ஆயுதம்), குடி(மக்களையுடைய நாடு), கூழ்(செல்வ வளம்), அமைச்சு (ஆலோசனை வழங்குபவர்), நட்பு (நட்பு நாடுகள்), அரண் (பாதுகாப்பு) என்பனவே அவையாகும். இன்றைய நிலையிலும் ஓர் அரசிற்கு இவ்வளவும் அவசிய மானவை.



'இறைமாட்சி' என்னும் அதிகாரத்தில் அரசனுக்கு வேண்டிய பதின்மூன்று சிறப்பம் சங்களையும் வள்ளுவர் கூறுகின்றார். அஞ்சாமை, கொடை, அறிவூக்கம் சோர்ந்துபோகாது இருத்தல், கல்வியறிவு, எடுத்த காரியத்தை ஆற்றும் துணிவு, நீதியற்றவற்றை செய்யாத பண்பு, நாட்டின் பொருள் வளத்திற்கு ஏற்பாடு செய்தல், நாட்டின் பொருள் வளத்தில் இருந்து பலன் பெறல், நாட்டின் பொருள்வளத்தைப் பாதுகாத்தல் எளிமையான தோற்றம், சினந்து பேசாமை, இனிய சொல்பேசல் என்பன அவையாம்.

'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற அதிகாரத்தில், தக்கவழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞரையே தனக்குத் துணையாகக் கொள்ள வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

'காலம் அறிந்து செயற்படல்' என்பது அரசனுக்கு மிகவும் முக்கியமான கருத்துக்களை எடுத்துக்கூறி விடுகின்றன. இக்கருத்துக்கள் இன்றய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் நிறையவே பொருந்துகின்றன.

'ஊக்க முடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந்தகைத்து'


என்னும் குறளானது "ஈரடி பாய ஓரடி பின்வாங்கல்" என்னும் கெரில்லாப் போர் முறையை கோடிட்டுக் காட்டுவது போலத் தோன்றுகின்றது.

'ஒற்றாடல்' என்னும் அதிகாரத்தில் உளவுத்துறை தொடர்பான அவசியம் பற்றி வள்ளுவர் கூறுகின்றார்.

ஆனால் இன்றைய அரசுகள், ஆட்சியா ளர்கள் இவற்றையெல்லாம் பின்பற்றி நடக்கின் றார்களா...? அப்படி நடந்திருப்பின் மே 01ம் திகதியும் பிரகடனப்படுத்தப்பட்டிருக்காது, விடுதலைப் போராட்டங்களும் துவங்கியிருக்காது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நூல் அமைப்பு முறை

நாம் பயன்படுத்தும் வேதாகமமானது இரு பிரிவுகளைக் கொண்டுள்ளது. அவை பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு எனப்படும். இவற்றில் பழைய ஏற்பாடு இஸ்ராயேலரின் 2000ம் ஆண்டுகள் வரலாற்றையும், புதிய ஏற்பாடு ஆதித் திருச்சபையின் வரலாற்றையும் கொண்டுள்ளது. இவற்றுள் யூதர்கள் பழைய ஏற்பாட்டை மட்டுமே தங்கள் வேதநூலாகக் கடைப்பிடித்து வந்தனர். இத்தகைய யூதர்களை இருவகைப்படுத்தலாம். பலஸ்தீனிய யூதர்கள், சிதறுண்டு போன யூதர்கள், இவர்களுள் பலஸ்தீனிய யூதர்கள் எபிரேய மொழியையும், சிதறுண்டு போன யூதர்கள் கிரேக்க மொழியையும் பேசினார்கள். இதில் பலஸ்தீனிய யூதர்கள் தங்கள் எபிரேய மொழியில் எழுதப்பட்ட நூலில் உள்ள 39 பிரதிகளையும் பழைய ஏற்பாட்டில் உள்ளதாக ஏற்றுக் கொள்கின்றனர்.

வழமையாக இவர்கள் அதையும் இரண்டு பாகமுள்ள நூல்களை ஒன்றாக இணைத்தும் பன்னிரண்டு சிறிய இறைவாக்கினர்களையும் ஒரு நூலாக்கியும், தமது வேத நூலில் இருபத்திரெண்டு நூல்களே உள்ளதாக் கூறுவர். எபிரேய வேத நூலானது கிரேக்கத்துக்கு மொழி பெயர்க்கப் பட்டபோது அலெக்சாந்திரியாவில் வாழ்ந்த கிரேக்க மொழி பேசுவோர் இவற்றோடு கிரேக்க மொழியில் எழுதப்பட்ட வேறு 7 நூல்களையும் தம் கிரேக்க நூலில் (செப்டுவாஜின்ற) சேர்த்து மொத்தமாக 46 நூல்களைத் தம் வேத நூலில் கொண்டுள்ளனர். கிரேக்க மொழியில் தங்கள் மூலப்பிரதிகளைக் கொண்டுள்ள 7 நூல்களும் பின்வருமாறு அடக்கப்படுகின்றன. தொபியாஸ், யூதித், சாலமோனின் ஞானம், சீராக், பாருக், 1ம் மக்கபேயர், 2ம் மக்கபேயர் என்பனவாகும். இவை இணைத் திருமுறை நூல்கள் என்றும் கூறப்படுவதுண்டு.

முதல் கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதர்களே. எனவே ஆதிக்கிறிஸ்தவர்கள் அனைவரும் யூதர்களின் வேதநூலையே, தமது வேத நூலாக ஏற்றுக்கொண்டனர். ஆனால் அவர்கள் அலெக்சாந்திரியா யூதர்களின் 46 நூல்களைக் கொண்ட தொகுப்பையே தேர்ந்தெடுத்தனர். எனவே கிறிஸ்தவாகளின் வேதாகமத்தில் அடங்கும் பழைய ஏற்பாட்டில் 46 நூல்களே உள்ளன. இதனை கிப்போ (393) கார்தேஸ் (397) திரித்தெந்தீன் (1546) போன்ற காலப்பகுதியில் கூட்டப்பட்ட சங்கங்கள் உறுதி செய்துள்ளன.

சீர்திருத்த காலத்தில் புரட்டஸ்தாந்து மதத்தினர் எருசலேம் யூதர்கள் பயன்படுத்திய குறுகிய தொகுப்பையே தமது வேதாகமத்தில் சேர்த்துக்கொண்டனர். இதுவே கத்தோலிக்கர்கள் பயன்படுத்தும் வேதாகமத்திற்கும், புரட்டஸ்தாந்தினர் பயன்படுத்தும் வேதாகமத்துக்குமுள்ள வேறுபாடு ஆகும்.

கத்தோலிக்க வேதாகம்த்தில் பழைய ஏற்பாட்டில் காணப்படும் கிரேக்க மொழியில் மூலப்பிரதிகள் எழுதப்பட்ட 7 நூல்களையும் புரட்டஸ்தாந்தினர் தவிர்த்துள்ளனர். எனினும் இன்று அதிகமான புரட்டஸ்தாந்து வேதாகமங்களில் இந்த 7 நூல்களும் மறைவு நூல்கள் என்ற பெயரில் காணப்படுகின்றன.

வேதாகமத்தின் மற்றைய பிரிவான புதிய ஏற்பாட்டினை எடுத்துக்கொண்டால் 27 நூல்கள் இதில் உள்ளன. இவற்றில் 4 நற்செய்தி நூல்களும், திருத்தூதர் பணியும், 21 திருமுகங்களும், திருவெளிப்பாடும் அடங்கும். இப்புதிய ஏற்பாட்டினை யூதர்கள் தமது வேத நூலில் ஏற்றுக்கொள்வதில்லை, எனினும் கத்தோலிக்கரும், புரட்டஸ்தாந்தினரும், புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளனர். இவ்வாறாக நாம் பயன்படுத்தும் வேதாகமமானது நூலமைப்பு முறை செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வாழத்தான் பிறந்தோமே
வாழ்விதனை வாழ்வென்று
வாழவா முடிகிறது
வாழ்விதனை வாழ்வாக்கி!

விலை கொடுத்தோம் இங்கே
அனைத்திற்கும் அனைவருமே
அன்பில்லா நெஞ்சினராய்
அன்புக்கும் விலை மதித்து!

பக்தனாய் முக்தனாய்
சித்தனாய்ப் பித்தனாய்
எத்தனாய் என்றிங்கே
எத்தனையோ பாத்திரங்கள்!

வாழ்வென்ற இருப்பினிலே
நாளொன்று மறைதலுக்கா
பொழுதொன்று புலர்கிறது
புவியிதிலே நமக்கெல்லாம்?

விடிகிறது பொழுது
விடியலுக்காய் நமக்கிங்கே!
பேராசை பெருங்கோபம்
பொல்லாப் பொறாமையெல்லாம்,
பொடிப் பொடியாய் ஆகி
நொடிப் பொழுதே புளுதிபட,
விடிகிறது பொழுது
விடியலுக்காய் நமக்கிங்கே!

அன்பையே வழியென்று
அன்புதான் நெறியென்று
அன்புதான் மொழியென்று
அன்பிலே இறைகண்டு
அன்பிற்காய் ஏங்கி
அன்பையே தேடுகின்றோம்
அன்பைக் கொடுக்காத
அன்பில்லா நெஞ்சினராய்!

புலர்வது பொழுதேயானால்
மனங்களில் விடியலில்லை!
மலர்வது மனங்களால்
மறைந்திடப் பொழுதிங்கேது?
அன்பிற்காய் ஏங்கவேண்டாம்
அன்பினைக் கொடுப்போம் வாரீர்
பெறுவதில் ஏதுமில்லை
கொடுப்பதில் யாதும் உண்டு!

**K.M. டில்கிஸ்**

## மனிதர்களின் மனதில் பதிய...



- தேளுக்குப் பின் பக்கம் விஷம், பாம்புக்கு முன் பக்கம் விஷம், தீய மனிதனுக்கு உடலெல்லாம் விஷம்.
- சவுக்கால் அடித்தால் தான் எருமை மாட்டுக்கே சொரணைவருகிறது. சட்டம் போட்டால் தான் மனிதனுக்கே புத்தி வருகிறது.
- தினமும் கரையேற முயலும் கடலலைகள் கரை ஏறுவதில் வெற்றி பெற்றுவிட்டால், உலகத்தின் கவலைகள் ஒருவாறு முடிவு பெற்றுவிடும்.
- விலையுயர்ந்த வேட்டியை அழுக்காக உடுத்துவதை விடக் கிழிந்த வேட்டியைச் சலவை செய்து உடுத்துவது வீட்டில் செல்வத்தை வரவழைக்கும்.
- தாயிடம் இருக்கும் மரியாதை மனிதனுக்கு மனைவியிடம் இருக்காததற்கு காரணம் என்ன? மனைவியும் ஒரு தாய் என எண்ணாதது தான்
- அறுந்து போன பட்டம் எங்குபோய் விழும் என்பதும், ஆத்திரக்காரன் கதை எதிலே முடியு மென்பதும் ஆண்டவனுக்கு மட்டுமே தெரியும்.
- தேங்கி நிற்கும் நீரில் கொசுக்கள் உற்பத்தியாகின்றன. சோம்பி நிற்கும் மனிதனிடம் துன்பங்கள் உற்பத்தியாகின்றன.

தொகுப்பு:- **திருமதி. சாந்தி சங்கர், அன்புவழிபுரம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம் வேண்டும்.

'கடும் உழைப்பில் சொத்தும்
கடலுக்குள் முத்தும்
பயன் தரும் வித்தும்
தேடலில் தோன்றும்'

நாம் ஒவ்வொருவரும் எதை யெதையோ தேட நினைப்போம். ஆனால் நான் மனித நேயத்தைத் தேட நினைக்கின்றேன். மனிதன் என்பவனுக்குள் மறைந்திருக்கும் மனித நேயம் பொருளற்றதாகவே இருக்கிறது. இவன் பொருளாதாரம் தேடி 'மனிதன்' என்பதன் பொருள் வெறுமையாகவே இருக்கிறது.

மனிதன் இன்று யாரும் இல்லாத ஒரு தனித்தீவாகவே இருக்கின்றான். இன்றைய மனிதரைப்பற்றி வேதம் சொல்கிறது 'இன்னலைக் கருவுற்று அவர்கள் இடுக்கண் ஈன்றெடுப்பர். வஞ்சகம் அவர்களது வயிற்றில் வளரும்' (யோபு 15: 35) மனித நேயத்தை நாம் தேடுகிறபோது மனிதன் எதைத் தேடுகின்றான் தெரியுமா? உலக இன்பங்களை மட்டுமே தேடுகின்றான். இதில் சுயநலம் தலைவிரித்தாடுகிறது. சுகபோகமாக வாழ மனிதன் இன வேட்டையாடுகின்றான். மனித நேயத்தைப் புதைத்து, வன்முறையை விதைக்கின்றான். இதனால் கலவரமாகிறது. கட்டுக் கட்டாயப் பணமும் சேருகிறது; கணக்கில்லாமல் உயிரும் அழிகிறது.

ஆனால் வேதம் சொல்கிறது 'செல்வத்தைச் சேர்க்க விரும்புகிறவர்கள் சோதனையாகிய கண்ணியில் சிக்கிக் கொள்கின்றனர்' (1தீமொ 6: 9) உலகத்தின் போக்கில் போகிற மனிதன் தன்னையே மறந்து விடுகின்றான். அப்படி இருக்கையில் மனிதனிடம் மனித நேயம் எங்கே மலர முடியும்? இன்றைய மனிதனிடம் மனித நேயம் காண்பது நெருப்புக்குளத்திலே செந்தாமரை பூப்பது போல் அல்லவா? இந்த உலகில் பிறந்த மனிதன் அதற்கு எதிரான தீச்செயலால் அதை ஒரு மயானமாக்கி விட்டான்! இந்த மயானத்தில் மனித நேயம் எங்கே உதயமாக முடியும்?

இன்றைய போட்டி போட்டு முன்னேறும் வாழ்க்கையில் யாரை எப்படி வீழ்த்தலாம் என்னும் எண்ணமும் சிந்தனையும் இயந்திர வேகத்தில் மனிதனைச் சுழற்றுகிறது. மரணமும் அவனைக் கௌவிக்கொள்கிறது. ஆனால் வேதம் சொல்கிறது 'உங்கள் அழிவுக்கு நீங்களே பொறுப்பு நானல்ல' (தி. பணி 18: 6) அன்று தொடங்கி இன்றுவரை நாம் எத்தனை அழிவுகளைக் கண்முன்னே கண்டிருக்கின்றோம். அனுபவித்தும் இருக்கின்றோம். இதற்கு காரணம் யார்? நாம் தான். வேறு எந்தக் காரணிகளும் இதற்குப் பொறுப்பல்ல. ஆனால் செய்வதையெல்லாம் செய்துவிட்டு கடவுள் மேல் பழி போடுகின்றோம். 'அவருக்குக் கண்ணில்லையா? இந்த அநியாயத்தை இப்படி பார்த்துக் கொண்டே இருக்கின்றாரே!' என்பர். இல்லா விட்டால் ஒரே பதிலில் இதெல்லாம் விதி என்று முடித்து விடுகின்றோம்.

கருவறை தொடங்கிக் கல்லறை வரை நாம் பார்ப்பதும் கேட்பதும் ஜாதியும் மதமும். கல்லறைகள் மனிதனுக்காக என்னும் நிலை மாறி, மனிதனே கல்லறையாகி விடுகிற நிலை இங்கே தோன்றுகிறது. பவுல் சொல்கிறது போல நாம் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாகவே இருக்கின்றோம். அன்பினை மறந்து அரசியலுக்கும் ஆஸ்தி அந்தஸ்துக்கும் அடிமைகளாய் இருக்கின்றோம். வேதம் சொல்கிறது 'ஒவ்வொரு வரும் அன்பின் அடிமைகளாய் இருங்கள்' (கலா 5: 13) ஆனால் நாங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி மனிதனை அடக்கி ஆள்கின்றோம். மனித நேயத்தை மறந்து போகின்றோம். அதிகாரமும் ஆணவமும் மனிதனின் கண்களை மறைத்து விடுகிறது. ஜாதியும் மதமுமே கைகலப்புக்களைச் சந்திக்கின்றது, கலவரத்தைத் தூண்டுகின்றது. இந்நிலையை மாற்ற முடியாதா? முடியும். மனிதன் நினைத்தால் முடியாதது எதுவுமே இல்லை என்பதை நிரூபித்துக் கொண்டு வருகிற காலம். இறைவனின் வல்லமை மனிதனை வழிநடத்தி வருகிறது. மனிதனோடு இறைவன் எப்போதும் துணைவரக் காத்திருக்கிறார். கடவுளை நாம் எங்கெங்கோ தேடுகின்றோம். ஆனால் வேதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லகிறது 'இதோ கடவுளின் உறைவிடம் மனிதர் நடுவே உள்ளது' (தி.வெ. 21:3) என்று நீ கடவுளைக் காணவிரும்புகிறாயோ அயலவனை அன்பு செய், மனித நேயத்தோடு அவனை நோக்கு, கடவுள் உன்னைத் தேடி வருவார். ஏழை, பணக்காரன், உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாடுகளைத் தகர்த்தெறி. நமக்குள் பிரிவினைகள் வேண்டாம்.

மனிதனுடைய வாழ்வு நிலையான வாழ்வு அல்ல. மரணம் இந்த நொடியா அல்லது அடுத்த நொடியா எப்போதோ தெரியாது. அதற்குள்ளே ஏன் நமக்குள் பிரிவினைகள்? வேண்டாம் வேண்டவே வேண்டாம். வேதம் சொல்கிறது 'நொடிப்பொழுதில் தோன்றி மறையும் புகை போன்றவர்கள் நீங்கள்' (யாக்கோபு 4: 14) இப்படிப்பட்ட வாழ்வில் நாம் மனித நேயத்தோடு வாழவே கடவுள் விரும்புகிறார்.

இந்த உலகில் விலையில்லாமல் பெறுவது புத்திமதியொன்றுதான். நானும் அதைச்சொல்ல விரும்பவில்லை. ஆனால் புரிந்துகொள்ளச் சொல்கிறேன். பிறந்தோம் வாழ்ந்தோம் இறந்தோம் இதுவல்ல மனித வாழ்க்கை. அதையும் தாண்டி இன்னும் ஒன்றிருக்கிறது, அதுதான் மனித நேயம். நாம் மகாத்துமாக்களாய் வாழவேண்டாம், நல்ல மனிதர்களாய் வாழ்வோம். வேதம் சொல்கிறது, 'உடன் பிறப்புக்கள் போன்று ஒருவருக்கொருவர் உளம் கனிந்த அன்பு காட்டுங்கள். பிறர் உங்களை விட மதிப்புக்குரியவர் என்று எண்ணுங்கள்' (உரோ 12: 10) இன்றைய சமூதாயத்தில் எத்தனையோ பேர் நல்ல பெற்றோராய் இருக்கின்றோம். அன்புள்ள சகோதரர்களாய், நல்ல நண்பர்களாய், உயர்ந்த மனிதர்களாய் இன்னும் நல்ல மருத்துவர்களாய், திறமையான சட்டத்தரணிகளாய், சிறந்த பொருளியலாளார்களாய், ஆசிரியர்களாய் இருக்கின்றோம். ஆனால் நம்மில் எத்தனைபேர் நல்ல மனிதர்களாய் வாழ்கின்றோம்? அதை விரல் விட்டு எண்ணி விடலாம் அல்லவா! மனித நேயத்தில் நட்புக்கொள்வதை விட உலகத்தின் நட்பையே நாம் விரும்புகின்றோம். இந்த உலகைச் சார்ந்த வாழ்வு ஒரு மனிதனை நிறைவு பெறச்செய்துவிட முடியாது. இந்த உலகத்தின் மீது நாம் நட்பு கொள்வதுக் பற்றி வேதம் சொல்கிறது 'உலகத்தோடு நட்புக் கொள்வது கடவுளைப் பகைப்பது என்பது உங்களுக்குத் தெரியாதா' (யாக்கோபு 4: 4) என்று

உலகை நேசிக்கிறவன் கடவுளைப் பகைக்கிறான். மனிதனை நேசிக்கிறவன் கடவுளையே நேசிக்கிறவனாகின்றான் என்பது உங்களுக்குத் தெரிகின்றதா? இன்னுமோர் யுத்தம் இனியும் வேண்டாம். வெற்றி முரசாய் ஒலிக்கட்டும். மனித நேயத்தின் சத்தம். பிறந்திருக்கும் இவ்வாண்டிலே புதிய மனித இனமாய் மாறுவோம். எம் உள்ளத்தில் நாற்காலியிட்டு அமர்ந்திருக்கும் வேற்றுமைகளைத் துரத்தியடிப்போம். மனித நேயத்தை உலகில் மலரச் செய்வோம். வேதம் சொல்கிறது 'எனவே உங்களுடைய முந்தின நடத்தைகளை மாற்றி தீய நாட்டங்களால் ஏமாந்து அழிவுறும் பழைய மனிதருக்குரிய இயல்பைக் களைந்து விடுங்கள்'. (எபே 4: 28) எனவே நாம் புது மனிதர்களாய்ப் பிறப்போம். பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கிணங்க பகைமை கழிந்து மனித நேயம் புதிதாய் மலரட்டும். ஏக்கத்தோடு தொலைந்த காலம் வெற்றிமுரசு கொட்டட்டும். வேற்றுமைக்குள்ளே சிறையிருந்த உள்ளங்கள் புத்தொளி பெற்று விடுதலை பெறட்டும். விடியாத நம் வாழ்வில் சமாதானம் உதயமாகட்டும். இந்தப் புத்தாண்டிலே மனித நேயத்தை விதைப்போம். அமைதியை அறுவடை செய்வோம். மனிதனின் பொருள் மனித நேயம் என்று உள்ளத்தில் பொறித்துக்கொள்வோம். உறவுகளுக்கு உயிர் கொடுப்போம். உணர்வுகளை மதிப்போம், மனித நேயம் வளர்ப்போம்.

❖ *இரசத்தை இறக்கும் போது ஒரு கரண்டி கருவேப்பிலைத் தூளை தூவி இறக்கினால் மணமாக இருக்கும்*

❖ *துணிகளில் பேனா மை பட்டு கறைபட்டு விட்டால் அந்த இடத்தை ஒடிக் கொலோன் நனைத்து ஓரிரு முறை அழுத்தித் துடைத்தால் துணி தூய்மையாகும்*

சிவலிங்கம் சுமதி, ஏறாவூர்-4




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமாதானக் கனவு

(நெடுங்கவிதை)

வாகரை வாணன்



1. பொன்மலை என்னும் நாமம்
பூண்டதோர் தேசந் தன்னைக்
கன்மலை காக்கும் அந்தக்
காவலே போது மென்பார்
மண்வளம் கொழிக்கும் பூமி
மருதமே கண்ணில் ஆடும்
என்வளம் இல்லை இங்கே
இயற்கையின் தேசம் அல்லோ!

2. ஆறது அசையும் மெல்ல
ஆர்த்தெழும் கடலின் மீது
ஏறியே நடக்கும் தோணி
இருகரை ஓர மாகப்
பாரிய தென்னஞ் சோலை
பாளைகள் குரும்பை யோடு
மாரியைப் போலும் கோடை
மண்ணது மெத்தை யாகும்!

3. சூரியன் தன்னைப் பார்த்துச்
சொல்லுக செய்தி என்னும்
வீரிய மரங்கள் கொப்பு
விண்ணினைத் தொட்டுப் பார்க்கும்
ஏரிகள் குளங்கள் வாவி
எழில்மலர் குலுங்கும் காட்சி
பாரினில் இதனைப் போலப்
பயன்மிகு தேசம் இல்லை.

4. மல்லிகைப் பந்தல் வாசம்
மனையதில் மூழ்கிப் போகும்
சொல்லரும் சுகத்தைத் தந்து
சோபனம் பாடும் காற்று
பல்லரும் செடிகள் நல்ல
பழங்களும் காயு மாக
கொல்லையாய்த் தூங்கும் நாடு
குறையென உண்டு மாமோ?

5. வேரினிற் கனிக ளோடு
வேண்டிய சுளைக ளோடு
ஊரினிற் பலாக்கள் எங்கும்
உட்கார வருவீர் என்று
வாரியே நிழலைக் கொட்டும்
வாசலில் மாவின் சோலை
பாரியைப் போலும் நிற்கும்
பனையது பழங்க ளோடே.

6. வாழைகள் குலைக ளோடு
வாரிசு குடும்பத் தோடு
பாளைகள் சிரிப்பி னோடு
பாக்குகள் கமுகை யோடு
தோழமை உறவி னோடு
தோடைகள் பழங்க ளோடு
நாளையப் பயன்க ளோடு
நால்வித மரங்க ளோடு.

7. தேசமே தோன்றும் அந்தத்
தெய்வீக லோக மாகும்
வாசமே செய்யும் மக்கள்
வாழ்வது போக மாகும்
பேசுமே கற்கள் கூட
பெருமைகள் கோடி கோடி
ஆசையை ஊட்டும் தேசம்
ஆனந்த சொர்க்க மாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**8.** தேனது சொரியும் கூட்டில்
தேவைக்கு மிஞ்சி ஆறாய்
மானது பாயும் காட்டில்
மணிப்புறா கூவல் கேட்கும்
வானது பொழியும் நாட்டில்
வயலது விளையும் நித்தம்
ஊனது குவியும் வீட்டில்
ஓங்கியே எரியும் தீபம்!

**9.** நாடதன் சிறப்பைக் காட்டும்
நகரதன் மக்கள் எல்லாம்
வீடென இதனைக் கொள்வார்
விளங்கிடும் கோயில் எல்லாம்
கூடுவார் கடலைப் போல
குளிரிளங் காலை நேரம்
ஈடில்லா அருளின் வெள்ளம்
இன்பம் போல் வேறுண்டாமோ?

**10.** நகரதைப் போல வல்ல
நாடதன் கிராமம் எல்லாம்
பகலரும் அழகுக் கோட்டம்
பார்ப்பவர் வாய்கள் ஊறும்
சுகமதை அள்ளி வீசும்
சுபநலம் இல்லாக் காற்று
சகமதில் இதனைப் போல
சரிநிகர் தேசம் உண்டோ?

**11.** ஈரின மக்கள் இந்த
எழில்மிகு தேசந் தன்னில்
ஓரின மாக வாழ்வார்
ஒற்றுமை என்னும் அந்த
வேரினை வெட்டிப் போட
வேந்தனும் எண்ணங் கொண்டான்
பேரினம் தன்னில் வந்து
பிறந்தவன் அதனால் தானே

**12.** தன்னினம் மட்டும் வாழ
தாரணி ஆளும் வேந்தன்
பன்னரும் சட்டம் செய்தான்
பரம்பரை உரிமை பேசி
என்னரும் மக்கள் தேசம்
ஏனையோர் எல்லாம் இந்த
மண்ணினில் கூலி செக்கு
மாடென உழைப்பீர் என்பான்!

**13.** கூலிகள் என்றே பட்டம்
கொடுத்தவர் தம்மைத் தள்ளி
வேலியே போட்டு விட்டான்
வேறொரு தேசம் போல
வாலினை அறுப்பேன் இங்கே
வந்தவர் ஆட்டம் போட்டால்
நூலிழை அளவு தானும்
நான்நிலம் தரவே மாட்டேன்.

**14.** விருத்திகள் நடவா தங்கு
வெறும் வயிற்றோடு மக்கள்
வருத்தியே அவனும் ஆள்வான்
வயல் குளம் வரண்டுபோகும்
சிரித்தவர் யாரு மில்லை
சிந்திடும் கண்ணீர் ஓட
தரித்திரம் ஆளு மம்மா
தாய்ப்பாலே வற்றிப் போகும்!

**15.** எங்கேயோ இருந்தார் வந்து
இங்கிடம் பிடித்துக் கொண்டார்
தங்கிய பின்னால் தங்கள்
தாயகம் என்றே சொல்வார்
பங்கமே செய்தார் எங்கள்
பரம்பரைப் பூமி தன்னை
இங்கவர் இருப்பார் ஆனால்
இதுவிரு நாடே ஆகும்.

**16.** நிலையிது தொடர்ந்த தாலே
நிம்மதி இழந்த மக்கள்
தலைவனாய் ஒருவன் ஆனான்
தாங்கவே மாட்டோம் இந்தக்
கொலைஞனின் ஆட்சி தன்னைக்
கூடுவோம் ஒன்றாய் நாமே
விலையெது கொடுத்த போதும்
விமோசனம் பெறுவோம் என்றான்.

*தொடரும்....*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் பக்கம்...



## 35வது ஆண்டு நிறைவு மலர்

தொண்டன் 1969ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்தச் சஞ்சிகை இன்றுவரை நிலைத்து நிற்பது ஓர் இமாலயச் சாதனை. பல்வேறு கொந்தளிப்புக்கள் நிலவிய இக்காலப் பகுதியில் அனைத்தையும் தாங்கி வெளிவந்தமை பாராட்டப் படவேண்டிய தொன்றாகும். இன்னும் பல்லாண்டு காலம் தொண்டன் வாழ்ந்து வளர வாழ்த்துகின்றேன்.

எஸ். என் இராமநாதன்
ஆஞ்ஞநேயர் பிறைவேட் லிமிட்டட், மட்டக்களப்பு.

## சூடும் சுவையும்


தன்னிகர் இல்லாத் தொண்டன் மலரே! உன்னில் மலருகின்ற அனைத்து விடயங்களும் சூடாகவும் சுவையாகவும் இருக்கிறது. ஒரு சிறு நூலாக நீ மலர்ந்தாலும் இன்று வரை தெரியாத பல மறை, இறை விடயங்களை உன் மூலம் அறிந்தும் தெரிந்தும் கொள்கிறேன். உன்னில் மலரும் அனைத்து அம்சங்களையும் படித்துச் சுவைப்பதில் அலாதிப்பிரியம் எனக்கு. அம்சங்கள் அனைத்தையும் அழகாகத் தொகுத்து உன் மேனியில் பிரசுரிக்கும் தொண்டன் மலர் ஆசிரியருக்கு என் நன்றிகள் பல.....

செல்வன் - டெம்ஸ்டன் செலர்
பிரதான வீதி, வாழைச்சேனை.

## அளப்பரிய சேவை செய்கிறது

தொண்டன் வருகை காத்திரமாக அமைந்துள்ளதுதோடு அது மலையகத்தையும் தேடி ஓடி வருகிறது. இன்றைய காலகட்டத்தில் அழியும் நிலையிலுள்ள தமிழ்மொழி இது போன்ற சஞ்சிகை களால் தான் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லப் படுகிறது. தொண்டன் போன்ற சஞ்சகைகள் தமிழுக்கு அளப்பரிய சேவை செய்கின்றன.

எஸ். பீ. பாலமுருகன்
F2, படுலுப்பிட்டி, பதுளை.



## புறக்கணிப்பு

தொண்டன் சஞ்சிகையின் 35வது ஆண்டு நிறைவு மலர் கண்ணுற்றேன். ஏற்கெனவே வெளிவந்த தொண்டன் சிறப்பு மலர்கள் சிலவற்றின் முன்அட்டைப் படங்களினாலே அலங்கரிக்கப்பட்டிருந்தது.

இது கடந்த கால வெளியீடுகளின் சிறப்புத் தன்மைகளை வெளிக்காட்டியதோடு திருகோணமலை மாவட்டம் புறக்கணிக்கப்பட்டுள்ளமையையும் தெளிவுபடுத்தியுள்ளது. எமது மறைமாவட்டத்தின் மூன்று மறைகோட்டச் சிறப்பு மலர்களின் படங்களையும் இணைத்திருக்கலாம், அல்லது அவைகளைத் தவிர்த்திருக்கலாம்.

G. அல்பேட்,
வேளாங்கண்ணி வீதி, பாலையூற்று
திருகோணமலை.

## கத்தோலிக்கரின் கடமை

திக்கெல்லாம் சென்று இறை உண்மையைப் பரப்பினார்கள் எம் முன்னோர்கள். இப்பணியைத் தொடர்ந்து செய்துவரும் தொண்டனுக்கு என் நன்றி கலந்த வாழ்த்துக்கள்!

தொண்டன் தனது 35வது வயதை எட்டிப்பிடித்து உயிருடன் வாழ்வதற்கு தாங்களும் இதற்குமுன் பணிபுரிந்த தொண்டர்களும் பெரும் சிரமப்பட்டுள்ளீர்கள் என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இப்பத்திரிக்கையைப் பாதுகாப்பது ஒவ்வொரு கத்தோலிக்கரது கடமையுமாகும். தங்கள் சேவை மேலும் வளர எனது வாழ்த்தும் வேண்டுதலும்.

திருமதி. அ. சகாயம்,
ஸ்பிரிங்வெலி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்குறை!


அண்மையில் வாசிகசாலையில் தொண்டன் இதழ் படிக்கக் கிடைத்தது. உள்ளே காத்திரமான ஆக்கங்கள், கவிதைகள், மதவிடயங்களுடன் அரசியல் பற்றியும் அலசப்பட்டிருந்தது, பாராட்டுகள்! இருந்தும் முன்பக்கத்தில் பெரும் குறை காணப்பட்டது. மட்டக்களப்பு, கல்முனைச் சிறப்பிதழ்களுடன் வேறு சில அட்டைப்படங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தன. ஆனால் திருகோணமலைப் படம் போடப்படவில்லை அது ஏன்? ஏ. யோகரெட்ணம் -

கந்தசாமி கோவில் வீதி,
திருகோணமலை.

# எந்த முகத்தோடு வரப்போகிறாய்?

தொண்டன் சஞ்சிகை கிறீஸ்தவ இலக்கிய வெளியீடு என்பதோடு நாம் தொண்டு புரியக் கற்றுத்தரும் ஓர் ஆசானாகவும் இருப்பான் என நினைத்திருந்த எமக்கு 35வது ஆண்டு நிறைவுமலர் மூலமாகக் திருகோணமலையைப் புறக்கணித்து பிரிவினை காட்டும் ஒரு பிரதேசவாதி என்பதை நிருபித்துவிட்டான். இனிமேல் நீ எந்த முகத்தோடு திருகோணமலைக்கு வரப்போகிறாய்?

எஸ். அன்ரனீற்றா,
செல்வநாயக புரம்,
திருகோணமலை.



[தொண்டன், திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட வெளியீடாகும். இங்கு பிரிவினை, பிரதேசவாதம், புறக்கணிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லை. திருகோணமலை மாவட்ட சிறப்பு மலராகவே தொண்டன் வெளிவந்திருக்க, அட்டைப்படத்தில் மட்டும் புறக்கணிக்கப்பட்டது என்று கூறுவது முரண்பாடாக இல்லையா? பிரதேசவாதம் தொண்டனின் அட்டையிலல்ல. பார்ப்போரின் பார்வையிலே, சிந்தனையிலேதான் இருக்கிறது. 35வது ஆண்டு நிறைவு மலரின் அட்டை பிரதேசப்பார்வையுடனோ, மறைக்கோட்டப் பார்வையுடனோ வடிவமைக்கப்படவில்லை. அந்தச் சிந்தனையே இல்லாது இருவர் இணைந்து கையில் கிடைத்த தொண்டன் இதழ்களில் தெளிவானதும், பொருத்தமானதுமான அட்டைகளைக் கொண்டு வடிவமைக்கப்பட்டதாகும். எம்மிடம் பிரதேசச் சிந்தனை -மறைகோட்டப் பார்வை இல்லாததும் திருகோணமலை மாவட்ட சிறப்புமலர் கையில் அகப்படாததும்தான் திருகோணமலை வாசகர்களின் மனக் குறைக்குக் காரணமாகி விட்டது. இது வேண்டுமென்று செய்யப்பட்ட புறக்கணிப்பு அல்லவாயினும் திருகோணமலை வாசகர்களுக்கு ஏற்பட்ட மனநோவுகளுக்காக வருத்துகிறோம்.

(இ. ஆ.)

# சேவல் விடியற்காலையில் கூவுவது ஏன்?



இயேசு பேதுருவிடம் 'இன்றிரவில் சேவல் கூவுமுன் மும்முறை நீ என்னை மறுதலிப்பாய் என உறுதியாக உனக்குச் சொல்லுகின்றேன். - என்று கூறினார். அவ்வாறே இயேசு எதிரிகளிடம் பிடிபட்டபோது பேதுரு மறுதலித்ததாக வேத நூல் கூறுகிறது. இந்தச் சேவல்கள் விடியற்காலையில் கூவுவது ஏன் தெரியுமா?

ஒவ்வொரு உயிரியின் உடல் அமைப்பிலும் ஓர் உயிரியல் கடிகாரம் (Biological Colock) இயங்குகிறது. இதன் இயங்கு தன்மைக்கேற்ப ஒரு லயம் (Rhytham) ஒவ்வொரு உயிரியிலும் உண்டு. சேவல்கள் குறிப்பிட்ட நேரத்தில் கூவுவதும் இதனால்தான். அனைத்து உயிரிகளும் இந்த உயிரியல் லயத்துக்கு உட்பட்டவையே. நமக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்தில் உறக்கம் வருவது கூட இந்த உயிரியல் லயத்தால்தான்.

- அறிஞர் எஸ். ஜனார்த்தனன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






அண்மையில் பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகரில் உள்ள 'சும்பல்' பூங்கா சாரணர்களின் வருகையினால் கலகலப்பான இடமாக மாறியது. ஆம், அங்குதான் பாகிஸ்தானின் சாரணசங்கத்தினரின் 13வது தேசிய ஜம்போரி இடம்பெற்றது. 2004 ஏப்ரல் 16 தொடக்கம் 23 வரை இந்த ஜம்போரி நடந்தது. இதில் பிறநாடுகளில் இருந்தும் சாரணர்கள் கலந்து கொண்டனர். இவ்வகையில் இலங்கையில் ஐந்து சாரணர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலமே தெரிவு செய்யப்பட்டனர். இவர்களிலே ஒரேயொரு தமிழ் மாணவர் மட்டுமே தெரிவாகியிருந்தார். மட்/புனித மிக்கேல் தேசிய பாடசாலையின் 12ம் வகுப்பு (கணிதப் பிரிவு) மாணவரான பெ. டிலுக்சாந் அவர்களே இவ்வாறு தெரிவு செய்யப் பட்டவராவார். இவரே இலங்கைக்குழுவின் அணித்தலைவ ராகவும் செயற்பட்டார். இவருடனான செவ்வி இம்முறை.

❖ **உங்களுக்கு சாரணியத்தில் எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது?**

✓ எனக்கு சிறுவயதில் சாரணியம் பற்றி அவ்வளவாகத் தெரியாது. பாடசாலையில் படிக்கும் போதும் மற்ற சாரணர்களை அவதானிக்கும் போதும், எனது தந்தையார் பாடசாலைக் காலங்களில் சாரணராக இருந்தபடியாலும் அவர் சாரணத்துறையில் வைத்திருந்த பற்றும் என்னை சாரணியத்தில் ஈடுபாடு கொள்ள வைத்தது.

❖ **சாரணியத்தில் நீங்கள் ஈடுபாடு கொள்வ தற்கு, உங்களை ஊக்குவித்தவர்கள் யார்?**

✓ சாரணியத் துறையில் என்னை நுழைத்து விட்டவர்கள் எனது பெற்றோர்கள்தான். பின்னர் என்னை வளர்த்து விட்டவர்கள் சாரணர் தலைவர்களான ஆசிரியர் திரு. எஸ். பத்மநாதன், கிறிஸ்டி அண்ணன் போன்றவர்களுடன் ஆசிரியர் திரு. எஸ். நரேந்திரன் அவர்களும் ஆவார்.

❖ **சாரணியத்தில் ஈடுபாடு கொண்டால், படிப்பில் முழுக்கவனமும் செலுத்த முடியாது என்ற ஒரு கருத்து நிலவுகிறதே அதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?**

✓ இக்கருத்தை முழுமையாக என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. சில வேளைகளில் சில வகுப்புக்களுக்கு எம்மால் செல்லமுடியாத நிலை ஏற்படலாம். எனினும் அப்பாடங்களை ஏனையவர்களுடன் கலந்து அறிந்து கொள்ள முடியும்தானே.

❖ **நீங்களும் க.பொ. த. (சா.த) பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகள் பெற்றதாக அறிந்தோம்....?**

✓ ஆம், எனது பரீட்சை முடிவுகளை சாரணியம் பாதிக்கவேயில்லை.

❖ **உங்களது பாகிஸ்தான் பயணங்கள் பற்றிக் கூறுங்களேன்...?**

✓ அது ஓர் அற்புதமான அனுபவம். இவ்வளவு சிறு வயதில் எனக்கு இவ்வாறான வாய்ப்புக் கிடைக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. என்னுடன் சேர்த்து ஐந்து மாணவர்களும், சாரண மாவட்ட ஆணையா ளர்கள் இருவருமாக ஏழுபேர் ஜம்போரியில் கலந்து கொண்டோம். முதலில் கராச்சி சென்று பின்னர் இன்னொரு விமானத்தில் இஸ்லாமாபாத் சென்றோம். இந்தியாவில் இருந்து 125பேர் அளவில் கலந்து கொண்டனர். எனினும் இலங்கைக் குழுவினருக்கே அதிக கௌரவம் வழங்கப்பட்டது. என்னுடையதும், சாரணத்தலைவர் ஒருவரினதும் பேட்டியொன்று பாகிஸ்தான் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்பானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **இலங்கை சாரண அமைப்பிற்கும், பாகிஸ்தானின் சாரண அமைப்பிற்கும் இடையேயான வேறுபாடு என்ன?**

✓ ஒரு பிரதான வேறுபாடு உண்டு. இலங்கை சாரணசங்கம் ஒரு சுயாதீன அமைப்பு. ஆனால் பாகிஸ்தானில் அது முற்றுமுழுதான அரசாங்க நிறுவனமாகவே காணப்படுகின்றது. அரசே முழுப் பண உதவியையும் கொடுக்கின்றது.

❖ **வேறு அனுபவங்கள் பற்றி...?**

❖ இஸ்லாமாபாத் மிகவும் குளிரான பிரதேசம். அங்கு ஒரு மலைப்பிரதேசத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு 2 பாகை செல்சியஸ் வெப்பநிலையே காணப்பட்டது. அங்கிருந்து பார்க்கும்போது இந்திய, சீன, எல்லைப்புறங்கள் தென்பட்டன. இவ்வேளையில் அதிபர் அருட். சகோதரர் ஜேம்ஸ் பீரீஸ், அருட்பணி. சிறிதரன் சில்வஸ்டர் ஆகியோருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

❖ **சாரணத்துறை தவிர வேறு துறைகளிலும் ஈடுபாடு கொண்டுள்ளீர்களா?**

❖ வானொலி நாடகங்களில் நடித்துள்ளேன். திரு. மலர்வேந்தன் அவர்கள் தொகுத்து வழங்கும் 'புதிய உலகம்' சிறுவர் நிகழ்ச்சிகளில் 'புவனேஸ் ரீச்சர்' எழுதும் பெரும்பாலான நாடகங்களில் நடித்துள்ளேன். அவர்கள் இருவருக்கும் இவ்வேளையில் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நாமும் நன்றி கூறி விடை பெற்றுக்கொண்டோம்.

**- ஆழியோன் -**

## அறுபதிலும் இருபது போன்று வாழலாம்

1. முதலில் நமக்கு வயதாகிவிட்டது என்ற எண்ணத்தைக் கைவிட்டு இளைஞனாக உணருங்கள் செயல்படுங்கள் ஒரு புத்துணர்ச்சியே தோன்றிவிடும்.
2. புகையிலை, மது, வெற்றிலை பாக்கு, கொழுப்புச் சத்து அதிகம் உள்ள உணவு வகைகள், இரசாயனம் (கெமிக்கல்) கலந்த உணவு வகைகள் உங்கள் உடல் நலத்தைக் கெடுத்து தோலில் சுருக்கங்களை உண்டாக்கி விடும். எனவே அவற்றைத் தவிர்த்துவிடுங்கள்.
3. எளிமையான உணவுகள், பழங்கள், காய்கள், கீரைகள், நார்ச்சத்து அதிகம் உள்ள உணவுகள் உங்கள் வயிற்றுக்கு எந்தவிதக் கெடுதலும் செய்யாமல் ஜீரண சக்தியைச் சீர்படுத்தி மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கும்.
4. எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருங்கள். சிரிப்புதான் உங்களுக்கு உற்சாக மருந்து. உங்களிடம் இருதயக் கோளாறு, நரம்புத்தளர்ச்சி, மனஅழுத்தம், இரத்த அழுத்தம் போன்ற நோய்களை அணுகவிடாது.
5. கடந்த காலத்தில் ஏற்பட்ட துன்பமயமான சம்பவங்களை மறந்து விடுங்கள். இன்பம் தந்த சுகமான நிகழ்வுகளை அசைபோடுங்கள்.
6. காலையிலும் மாலையிலும் முடிந்த அளவு நடக்க வேண்டும். நடைப் பயிற்சி உங்களின் கொழுப்பைக் கரைத்து வெளியேற்றி விடுவதுடன் தூய்மையான பிராண வாயுவை உங்களுக்குத் தரும்.
7. உடலைத் தூய்மையாக வைத்திருப்பதுடன் சுத்தமான சிறிது தளர்வான ஆடைகளையே அணியுங்கள்.
8. முடிந்தளவு உங்கள் வேலைகளை நீங்களே செய்து கொண்டு மற்றவர்களுக்கும் உதவியாக இருங்கள்.
9. பக்கத்தில் உள்ளவர்களுடன் நட்பாகப் பழகுங்கள். குழந்தைகளுடன் அன்பாகப் பழகி கதைகள் சொல்லி அவர்கள் மனதில் இடம் பிடியுங்கள்.
10. தினமும் சிறிது நேரம் யோகாசனம் செய்யுங்கள். அறுபது வயதிலும் இருபது வயது போன்று துள்ளல் வாழ்க்கை வாழலாம்.

-டாக்டர். ஆர். குமரேசன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியின் சிறப்பு

அறியாமை இருளினை அகல ஓட்டுவது கல்வி
அறிவுக்கு உணவினை அள்ளி ஊட்டுவது கல்வி
பசுமைப் புரட்சிக்குப் பலம் கூட்டுவது கல்வி
பல்தொழிலும் பெருகிடக் கரம் நீட்டுவது கல்வி.

- * -

'அறிவு - திறன் - மனப்பாங்கு' நன்கு மாற்றுவது கல்வி
அன்பு - பண்பு நற்குணம் நாளும் ஏற்றுவது கல்வி
பணிவு துணிவு கனிவினைப் போற்றுவது கல்வி
பல்கலையும் பெருகிடப் பணி ஆற்றுவது கல்வி.

- * -

சிந்தனைத் தீயினை மனதில் மூட்டுவது கல்வி
சீரையும் சிறப்பையும் நம்மிடை நாட்டுவது கல்வி
இன்பமும் இனிமையும் இதமாய் மீட்டுவது கல்வி
இகமதில் இறைவனை அன்பாய்க் காட்டுவது கல்வி.

- * -

முழுமனித வளர்ச்சியே உயர் கல்வியின் நோக்கம்
முடிந்ததென் கல்வியென்று உமக்குத் தலையிலேன் வீக்கம்?
'கல்விக்குக் கரையில்லை' என்பது அறிந்துமா தூக்கம்?!
'கற்றது கையளவே' என்பதை அறிந்திட்டால் ஆக்கம்.

எஸ்.ரஞ்சன் செல்வகுமார்

## வாழ்நாளைக் கூட்டுகிறது 'வாழை இலை'ச் சாப்பாடு



அனைவரும் விரும்பி உண்ணக்கூடியதும் மிகவும் விலை மலிவானதும் வாழைப்பழம். இதன் அமைப்பு பூச்சிகள், பக்டீரியாக்கள் போன்ற எவையும் உள்ளே செல்ல முடியாதபடி அமைந்துள்ளது. வாழைப்பழத்தின் பூர்வீகம் இந்தியாவும் மலேசியாவும் ஆகும். பின்னர் இங்கிருந்து மற்ற நாடுகளில் பயிரிடப்பட்டது. கதலி வாழை, எதரை வாழை, பரங்கி (கோழிக்கூடு) வாழை, யானை வாழை, செவ்வாழை, கறி வாழை, போன்ற எண்ணற்ற வகைகள் வாழைப்பழத்தில் உள்ளன.

100 கிராம் பழத்தில் தண்ணீர் 70.1 வீதமும் புரோட்டின் 1.2 வீதமும் கொழுப்பு 0.3 வீதமும் தாதுக்கள் 0.8 வீதமும் நார்ச்சத்து 0.4 வீதமும் மாவுச்சத்து 27.2 வீதமும் உள்ளன. கல்சியம் 17 மில்லி கிராமும் பொஸ்பரஸ் 36 மில்லி கிராமும் இரும்புச்சத்து 0.9 மில்லி கிராமும் விற்றமின் சி 7 மில்லி கிராமும் மற்றும் சிறிதளவு விற்றமின் 'பி'யும் உள்ளன. மற்றப் பழங்களை விட வாழைப்பழத்தில் தண்ணீர்ச் சத்துக் குறைவு. தினமும் வாழை இலையில் சாப்பிடுபவர்களைக் கண்டு முதுமை அஞ்சி ஓடிவிடுமாம். சூடான சோறைத் தளிர் வாழை இலையில் தினம் ஒரு வேளையாவது உண்டு வந்தால், வாழை இலையிலுள்ள பச்சயம் இதயத்தில் உள்ள இரத்தக் குழாய்களில் ஏற்படும் அடைப்பைப் போக்கி, மாரடைப்பு (ஹார்ட் அட்டார்க்) வராமல் தடுக்கும். மேலும் தொடர்ந்து வாழை இலையில் சாப்பிட்டு வந்தால் வாழ்நாள் கூடும் என்று ஆய்வுகள் கூறுகின்றன. நீண்ட கால அல்சர் நோயினால் (குடல் புண்) துன்பப்படுபவர்கள் பயமில்லாமல் சாப்பிடக்கூடிய ஒரே பழம் வாழைப் பழம்தான். அதிகமான அமிலச் சுரப்பினால் தோன்றும் வயிற்று எரிச்சலைச் சரி செய்து இரைப்பையைப் பலப்படுத்திவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கு மட்டும்

முடிவுத்திகதி
30 - 07 - 2004




# விவிலியம் கற்போம் - 31

## தவளைகள் தொல்லை

(விடுதலைப் பயணம் 8:1-15)

ஆண்டவர் மோசேயை நோக்கி, நீ பார்வோனிடம் போய், எனக்கு வழிபாடு செய்வதற்காக என் மக்களை அனுப்பிவிடு, அதற்கு மறுத்தால் .............................. உன் நிலப்பகுதியெங்கும் தவளைகளால் தாக்கப்போகின்றேன். அவை......................... நதியை நிரப்பி, உன் வீட்டுக்குள்ளும், உன் படுக்கையறையிலும், உன் குடிமக்கள் வீட்டிலும்,................................ , மாவு பிசையும் தொட்டிகளிலும் உன் அலுவலர் ................................மீதும் தவளைகள் ஏறும் என்று சொல். ஆரோன் தம் கையை நீட்டவே தவளைகள் ஏறிவந்து....................................நாட்டை நிரப்பின. அப்போது பார்வோன் மோசேயையும் ஆரோனையும் அழைத்து, தவளைகளை அகற்றிவிடுமாறு ஆண்டவரை மன்றாடுங்கள், அவருக்கு பலி செலுத்துமாறு ................................ மக்களை அனுப்பிவிடுகின்றேன் என்றான். அதற்குஅவர்கள் தவளைகள் உம்மிடமிருந்தும் உம் வீட்டிலிருந்தும் அழிக்கப்பட்டு....................................மட்டும் இருக்குமாறு நாம் எப்போது மன்றாட வேண்டும் என்று கேட்டனர். அதற்கு அவன் நாளைக்கு என்றான். பின்பு மோசேயும் ஆரோனும் ஆண்டவரை ................................ மன்றாடினார்கள். ஆண்டவரும்அவர்கள் மன்றாட்டின்படியே செய்தருளினார். ஆனால் பார்வோன் தன் மனதைக் கடினப்படுத்திக்கொண்டான். ஆண்டவர் சொன்னபடியே அவன் அவர்களுக்குச் செவிசாய்க்கவில்லை.

**விடைகள் :-** **நோக்கி, ஆற்றில், நானே, நைல், எகிப்து, நான், அனைவர், அடுப்புகளிலும்**

*(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதி அனுப்பப்பட வேண்டும் பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டிக்குச் சேர்த்துக்கொள்ளப்பட மாட்டாது.)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிசுப் போட்டி

பிள்ளைகளுக்கு மட்டும்

முடிவுத்திகதி
30 - 07 - 2004



## அறிவுவை வளர்ப்போம்–31

(சரியான சொற்களின் கீழ் அடிக்கோடிடுக)



1. இலங்கையில் மழை வீழ்ச்சியைக் கூடுதலாகப் பெறும் நகரம்
(வட்டவளை, நுவரெலியா, இரத்தினபுரி)

2. இந்தியாவின் புதிய பிரதமர் இந்த மாநிலத்தைச் சேர்ந்தவர்
(குஜராத், கேரளா, பஞ்சாப்)

3. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவர்
(ஷியாமா சாஸ்திரி, புரந்தரதாசர், பாபநாசசிவம்)

4. இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரில் ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டவர்.
(மஹேல ஜெயவர்தனா, மாவன் அத்தப் பத்து, சனத் ஜெயசூரியா)

5. மனித உடலில் உள்ள மிகப் பெரிய சுரப்பி
(கணையம், கல்லீரல், தைராய்ட்)

6. காகிதத்தைக் கண்டுபிடித்த நாடு
(சீனா, எகிப்து, இந்தியா)

பெயர் : ..........................................................................................

..........................................................................................

..........................................................................................

அனுப்பவேண்டிய முகவரி–31
விவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம்
தொண்டன்
அ.பெ. எண் 44
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைகள்

## விவிலியம் கற்போம் - 30.

ஆண்டவரிடம், என், நீர், இடறல்தான், இஸ்ரயேல், மோசே, ஒன்று, எடுத்து, ஆரோன், பாம்பாக.

## அறிவை வளர்ப்போம் - 30

1) கொபி அனான் 2) அப்துல்கலாம் 3) யூரோ 4) யூதாஸ் 5) 1955 6) 72.

*இரு பிரிவுகளுக்கும் சரியான விடைகளை அளித்து ரூபா 100/= பெறுமதியான பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்*

A.C. நான்சி
26, வேளாங்கண்ணி வீதி,
பாலையூற்று, திருகோணமலை.

R.C. நொறேஞ்சலா
291/17, ஏகாம்பரம் வீதி,
திருகோணமலை.

*ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளைஅளித்து ரூபா 50/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்*

K. எடித்ஷிரோமி,
பாத்திமா பவுண்டரி
கல்முனை -1

ஜெரோமி பாத்திலட்
66/11, செபஸ்தியார் வீதி
மட்டக்களப்பு.

*பாராட்டுப் பெறுவோர்*

ஜெடிற்றா செல்வராஜா
களுவன்கேணி வீதி
வந்தாறுமூலை - 1, செங்கலடி.

அ. சுஜிவனி
மின்சார நிலைய வீதி
மூதூர் - 07.

பங்குகொண்டவர்கள் அனைவருக்கும் எமது நன்றி.
(ஆ - ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

# இலங்கை வானொலி தேசிய சேவையில்
# கத்தோலிக்க நிகழ்ச்சிகள் - தமிழ்
## ஜூலை 2004

## காற்றில் கலந்து வரும்...

**கத்தோலிக்க நற்சிந்தனைகள்**

நேரம்: காலை 5.50 மணி

நாள்: 10, 11, 12, 13, 14, 15, 16, 24, 25, 26, 27, 28, 29, 30

**சிறுவர் உலகம்** (சிறுவர்களுக்கான 15 நிமிட நிகழ்ச்சி)

நேரம் : மாலை 9.30 மணி

நாள் : 06, 20

**புதிய உலகம்** (வளந்தோருக்கான 30.00 நிமிட நிகழ்ச்சி)

நேரம் : மாலை 5.30 மணி

நாள் : 04, 18

---

நிகழ்ச்சித் தொகுப்பு : *மலர்வேந்தன்*
தொகுப்பு : சமூகத்தொடர்பு நிலையம்
அ.பெ. எண் - 44
மட்டக்களப்பு

*Wanasinghe Printers, Batticaloa*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org